# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு ஆவணி மாதம் 12-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 31-ம் இலக்கம்

# மேற்குஜேர்மனியில் ஞாயிறு வேலைக் குறைப்பு

மேற்கு ஜேர்மனி தேசத்தின் பாராளுமன்றம் ஞாயிறுவார வேலையைக் குறைக்க அண்மையில் ஒரு புதிய சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகளில் தொண்டாற்றும் தொழிலாளிகளுக் குரியதெனினும், ஏனைய தொழிற்சாலைகளிலும் இதேவிதமான ஒழுங்கு அனுட்டிக்கப்படுமென்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க தொழிலாளர் சங்கங்கள் எடுத்துவந்த முயற்சிகளின் பயனுகவே இப்புதிய சட்டம், முதலாளிகளால் பலமாக எதிர்க்கப்பட்ட போதிலும் இப்போது நிறைவேறியுள்ளது. தொழிலாளர் தங்கள் ஞானக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவகாசம் தரும்படி வாதாடி இப்போது வெற்றி பெற்றுள்ளனர்.

## முகமாலை

முகமாலைப்பதியிலே 24-8-61 இல் கொண்டாடப்படும் வழமையான திருநாள் கொண்டாடப்பட மாட்டாது.

## புதிய மியூனிக் மேற்றிராணியார்

தற்போது உலககெடுபிடி யுத்த களமாயிருந்துவரும் பேர்ளின் நகர மேற்றிராணியாரான கருதினல் டொப்னர், தம்மை அங்கேயே இருக்க விடவேண்டுமெனப் பலவாருகப்பரிந்து கேட்டும், மியூனிக் அதிமேற்றிராணியாராக நியமனம்பெற்றிருக்கின்ருர். ஆறுமாதங்களாக வளர்ந்துவந்த சந்தேகத்தைத் தீர்த்துவைத்த இந்நியமனத்தைக் கருதினல் அவர்களின் காரியாலயம் வெளியிட்டபோது, பரிசுத்தபிதாதாமே இந்நியமனத்தை விரும்புவதாகத் தமது கையெழுத்தில் கடிதம் அனுப்பினுரெனத் தெரிவித்தது.

அக்கடிதத்தில், கருதினல்அவர்களின் பரிவான விருப்பத்தைத் தாம் அறிவதாகவும், இத்தியாகத்தைத்தாமே விரும்புவதாகவும், பரிசுத்த்பிதா தெரிவித்திருக்கிருர். "கடவுள் என்னை அழைக்கிருர்" என்றே கருதினல்அவர்கள் இக்கட்டளையைஏற்ருர். பேர்ளின் தினத்தாள்கள் இந்நியமனத்தைப்பற்றி யோசியங்கூறியதற்கு, "பேர்ளின் என் அருமைப் பத்தினி; அவளிடமிருந்து விவாக நீக்கம் பெற்றுக்கொள்ள அற்பமேனும் விருப்புடையேம் அல்லேம்" என ஆண்டகை கூறியிருந்தார்.



இம்மதி 15-ந்திகதி மடுத்திருப்பதியில் மாதாவின் ஆரோபணத் திருநாள் ஆடம்பரமாகக் கொண்டாடப்படவிருக்கின்றது. மடுமாதாவைப் பற்றிய கட்டுரை. கீர்த்தனைகளை 5-ம்பக்கத்தில் காணக.

### ஐக்கியநாடுகளின் பொருளாதார - சமூக சங்கத்தில் பாப்பரசரது புதிய சமூகப்

# பொதுநிருபத்தின் எதிரொலி

ஜெனிவாப் பட்டணத்தில் நடைபெற்றுவரும்ஐக்கிய நாடுகளின் பொருளாதார — சமூகசங்கத்தில் பரிசுத்த பாப்பரசர் அண்மையில்விடுத்த "அன்னையும் ஆசிரியையும்" என்ற சமூகப் பொதுநிருபம் அதிக இடம்பெற்று வருகின்றது. பிரான்சு, இத்தாலி, ஸ்பெயின், உருகுவே ஆதியாம் நாடுகளின் பிரதிநிதிகள் பாப்பரசரின் நிருபத்திலிருந்து பலமேற்கோள்களை எடுத்து உபயோகித்துள்ளனர். விசேஷமாக, பொருளாதாரத்துறையில் பின்தங்கிநிற்கும் நாடுகளுக்கு வளம்பெற்றநாடுகள் உதவவேண்டும்;. தனிமனிதனின் முதன்மை, சமூக பொருளாதார அபிவிருத்தியில் காணப்படவேண்டிய சமநிலை, விவசாயத்துறையில் அபிவிருத்தியின் அவசியம் முதலியவிடயங்கள்பற்றிப் பாப்பரசர் கூறியவை எடுத்தாளப்படுகின்றன.

மேற்படி சங்கத்தின் கூட்டங்களில் பரிசுத்தஸ்தானத்தின் இரு பிரதிநிதிகளும் உத்தியோக பூர்வமான அவதானிகளாகப் பங்குபற்றிவருகின்றனர்.

# எட்டுநாட்களுள் மூன்று கருதினல்மார் காலமாயினர்

சென்றமாதம் 30-ந்திகதி மகாமேன்மைதங்கிய கருதினல் தார்டீனி ஆண்டகை காலமானுர். அவரைத் தொடர்ந்து கடும் நோயுற்றிருந்த மகாமேன்மைதங்கிய கருதினல் நிக்கொலா கனுனி ஆண்டகைஅவர்கள் சென்றவார இறுதியில் தமது 87-வது வயதில் பரமபதமடைந்தார். இவர் 50ஆண்டுகளுக்கு மேல் பாப்பரசரின் நிர்வாக சங்கங்களில் கடமையாற்றிவந்துள்ளார். 1935-ம்ஆண்டு பரிசுத்த 11-ம்பத்திநாத பாப்பரசரால் கருதினல்பதவிக்கு உயர்த்தப்பெற்ற இவர், சென்றவருடம் கருதினல்பதவியின் வெள்ளிவிழாவைக் கண்டுகளித்தார். 12-ம் பத்திநாதருடைய ஆட்சிக்காலத்தில் வத்திக்கான்தேச ஆட்சிக்கும், விதிவிலக்குகள், இளக்காரங்கள், ஞானப்பலன்கள் முதலியனவழங்குவதற்கும் பொறுப்பாளியாக இருந்துவந்தார். 23-ம் அருளப்பரின் தேர்வை உலகிற்கு அறிவித்தவரும், அவருக்கு முடிசூட்டியவரும் இக் கருதினல் ஆண்டகையே.

சென்ற ஞாயிறுவாரம் 6-ந்திகதி காலை 6மணியளவில் மலீன்நகரத்தின் அதிமேற்றிராணியாரும், பெல்ஜியதேசம் முழுவதின் முதல்வருமான மகாமேன்மைதங்கிய கருதினல் வான் ரூேய் ஆண்டகை அவர்கள் காலமானுர். இறக்கும்போது இவருக்கு வயது 87. பெல்ஜியம் தேசத்திலும், அந்நாட்டின் அரசரிடமும் அவர் அதிகசெல்வாக்குடையவராயிருந்துவந்தார். 25 வருடங்களுக்குமேல் இவர் தமது உயர்பதவியை வெகுசிறப்புடன் வகித்து, திருச்சபைக்கும், தமது தேசத்திற்கும் பெரும் தொண்டாற்றியுள்ளார். இவருடைய மரணத்துடன் கருதினல்மாரின்தொகை 81 ஆகக்குறைந்துள்ளது. இவர்களுள் 29பேர் மட்டுமே இத்தாலியர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கிழக்கு ஜேர்மன் அகதிகளின் தொகை அதிகரிக்கின்றது

கிழக்கு ஜேர்மனியிலிருந்து மேற்கு ஜேர்மனிக்குத் தப்பிஓடுவோரின் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. சென்ற ஆடி மாதத்தின் முதல் 10 நாட்களுள் 15,624 பேர் கிழக்கு ஜேர்மனியிலிருந்து சுதந்திரத்தை விரும்பி மேற்கு பேர்லீன் வழியாக மேற்கு ஜேர்மனியை அடைந்துள்ளனர் என்று தெரியவருகிறது. இதற்குக் காரணம் கொம்யூனிஸ்தரின் ஆட்சியின் கீழுள்ள கிழக்கு ஜேர்மனி மக்களைப் பீடித்துள்ள பீதியே என்றும் கூறப்படுகின்றது.

### மகமதியர்மாதாவைமகிமைப்படுத்தினர்

தற்கால தபால் உலகில் மரியன்னைக்குச் சிறந்த மதிப்புத்தந்தவர்கள் மகமதியர் நிறைந்த துருக்கி அரசாங்கமாகும். அங்கு 1953-ம் வருஷத்தில் மரியாயின் மோட்சாரோபணத் திருநாளில், மரியன்னையின் திரு உருவமும், பழைய எபேசு நகரத்து இடிந்த தோற்றமும் உள்ள இரு தபாற் தலைகளை வெளியிட்டனர். முற்காலம் எபேசு நகரத்தில் கூடிய திருச்சபைப் பொதுச் சங்கம் மரியம்மாள் தேவதாய் என நிர்ணயித்தது. யேசு மோட்சாரோகணமான பின், அப்போஸ்தலரான அருளப்பருடன் தேவதாய் இந்நகரத்தில்தான் வசித்து வந்தாள் என்பதும் ஐதீகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும்செய்தி

### கொழும்பு
### அர்ச். சூசையப்பர் கல்லூரிக்கு
### புதிய தலைவர்

கடந்த 20 ஆண்டுகளாகக் கொழும்பு அர்ச். சூசையப்பர் கல்லூரியின் அதிபராக இருந்துவந்த அதிவண. பீற்றர் அல்காந்தரு பிள்ளை, ஓ. எம். ஐ. சுவாமியார் அவர்கள் தமது பதவியில் இருந்து நீங்கவிரும்பியதன்காரணமாக வண. டபிள்யு. எல். ஏ. டொன் பீற்றர் சுவாமியார் அவர்கள் அர்ச். சூசையப்பர் கல்லூரியின் புதிய தலைவராக மகாவந். கொழும்பு அதிமேற்றிராணி ஆண்டவர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிவண. பீற்றர் ஏ. பிள்ளை சுவாமியார் அவர்களின் பராமரிப்பின் கீழ் அர்ச். சூசையப்பர்கல்லூரி எல்லாத் துறைகளிலும் தீவிரமான முன்னேற்றம் அடைந்து வந்தது என்பது யாவரும் அறிந்த விஷயம். கத்தோலிக்க மாணவர் உயர்தரகல்விபெறுவதற்குப் போதியவசதிகளை உண்டு பண்ணுவதிலேயே அதிவண. பீற்றர்பிள்ளை சுவாமியார் அதிக கவனம் செலுத்திவந்தார். இதன் பயனாக அக்குவைனஸ் சர்வகலாசாலைக்கல்லூரி உருவாகியது. அர்ச். சூசையப்பர்கல்லூரியில் இருந்து இளைப்பாறும் சுவாமியார் அவர்கள் தமது நேரம் முழுவதையும் மேற்படி சர்வகலாசாலையின் முன்னேற்றத்திற்காகவே செலவிடுவர் என்று தெரிய வருகின்றது.

அர்ச். சூசையப்பர் கல்லூரியின் புதிய தலைவராகிய வண. டொன் பீற்றர் சுவாமியார் அவர்கள் ஓர்சிறந்த அறிவாளி. ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் பாண்டித்தியம் பெற்றவர். லண்டன் சர்வகலாசாலையின் பி. ஏ, எம். ஏ. பட்டங்களைச் சிங்களமொழிப்படிப்பிலும், கல்வித்துறையிலும் முறையே பெற்றுள்ளார். 1956-ம் ஆண்டில் இருந்து கொழும்பு அர்ச். ஞானப்பிரகாசியார் குருமடத்தின் அதிபாகக் கடன்மையாற்றியுள்ளார். அர்ச். சூசையப்பர் கல்லூரியின் பழையமாணவர் ஒருவர் அதன் அதிபாக நியமனம் பெற்றுள்ளதைக் குறித்துப் பழைய மாணவர்கள் அகமகிழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

### தலைவில்லு
### அர்ச் அன்னம்மாள்
### திருநாள்

சென்றமாதம் 30-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை தலைவில்லில் அர்ச். அன்னம்மாளின் மகோற்சவம் வழமைபோல் அதிசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருநாளுக்கு முந்தியதினம் சிலாபமேற்றிராணியாரான அதிவந். எற்மண்ட் பீரிஸ் ஆண்டகை அவர்களால் மாலைஆராதனை வெகுஆடம்பரமாகப்பாடப்பெற்றது. திருநாள் அன்று காலை நாலுமணி தொடக்கம் திவ்விய பூசைப்பலிகள் தொடர்ந்து ஒப்புக்கொடுக்கப்பட்டன. காலை ஏழுமணிக்கு மேற்றிராணியாரின் ஆடம்பரபாடற்பூசை நடைபெற்றது. அத்தருணம் வண. அன்று பீற்றர் பெர்னாண்டோ, ஓ.எம்.ஐ. சுவாமியார் அவர்கள் பிள்ளைகளின் கல்விவிஷயத்தில் பெற்றோருக்குரிய பெரும் பொறுப்புப்பற்றி ஓர் அரியபிரசங்கம் நடத்தினார்.

2 மைல்தூரம்செல்லும் அர்ச். அன்னம்மாளின் திருச்சுரூபசுற்றுப்பிரகாரத்துடன் பத்துமணியளவில் திருநாள் இனிதேமுடிவெய்தியது. 50,000-க்கு அதிகமான அர்ச். அன்னம்மாள் பக்தர்கள் இவ்வருடம் தலைவில்லுத் திருப்பதிக்குச் சென்றிருந்தனர் என்று தெரியவருகிறது. யாத்திரிகர்களுக்கு வேண்டியவசதிகள் யாவும் திருசேத்திர பரிபாலகர் சுவாமி அவர்களால் நன்றாக ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. போக்குவரத்துக்கு 'இ. போ. சபையினராலும், புகையிரதப்பகுதியினராலும் தகுந்தஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

### நீர்கொழும்பு
### கடற்கரைத்தெருப் பங்கில்
### மகா ஞான ஒடுக்கம்

நீர்கொழும்பு, கடற்கரைத்தெரு, அர்ச். செபஸ்தியார் விசாரணைப்பங்கில் சென்ற இருவாரங்களாகத் தமிழில் ஓர் மகாஞானஒடுக்கம் நடைபெறலாயிற்று. ஞானஒடுக்கம் அதி வண. சற். என். குரூஸ் சுவாமியார் மற்றும் வண. ஜே. நவரத்தினம், வண. அல்பிறட் சுவாமிமார்களால் நடாத்தப்பட்டது. வண. குருப்பிரசாதிகளின் அரிய பிரசங்கங்களும், பிரயாசமும் ஆத்துமங்களின் மனதைக் கவர்ந்ததோடு பெரும் பாராட்டத்தக்கனவுமாக அமைந்தன. மேலும், மரித்தோர்தினம், தொழிலாளர் தினம், பரிகார தினம், தேவமாதாவின் தினம், நோயாளர் தினம், பச்சாத்தாபநாள் யாவும் இடம்பெற்றன.

விசாரணைப்பங்கின் பெரும்பாலானோர் ஞானஒடுக்கத்தில் பங்குபற்றி அநேக ஆத்துமநன்மைகளை அடைந்தனர் என்பது மனமகிழ்ச்சியோடு குறிப்பிடத்தக்கது. ஞானஒடுக்க இறுதியில் பங்கின் கட்டளைக்குரவர் ஜி. யோசப் பெர்னாண்டோ சுவாமியார், மகா ஞானஒடுக்கத்தைப் போதித்த குருப்பிரசாதிகளுக்கும், மற்றும் ஞான ஒடுக்கத்தின் நற்சித்திக்காகச் செபித்த சன்னியாச கன்னியாஸ்திரிமாருக்கும், பங்குக் கிறிஸ்தவர்களின் சார்பாகத் துதிகூறி, ஞான ஒடுக்க ஞாபகத்தை, விசுவாசிகள் தங்கள் உத்தம கிறீஸ்தவ சீவியத்தினால் துலங்கச்செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதுடன், உத்தரியமாதாவின் பாதுகாவலில் தொடங்கிய மகாஞானஒடுக்கம் மாதாவின் கிருபை ஆசிர்வாதத்தால் இனிது முடிவுற்றது.

'நிருபர்'

---

### 2-ம் வருட
### மரண ஞாபகம்

"காலையில்மலர்ந்து மாலையில்உலர்ந்து போகும் மலரேபோல் இவர் சீவியநாட்கள் மறைந்துபோயின." இவரைச் சீவியத்தில் நேசித்தவர்களே! மரணத்திலும் மறவாதீர்கள்.

எங்களால் என்றும் மறக்கமுடியாத விதமாய் எங்களை நேசித்த என் அருமைப் பத்தாவும், எங்கள்நேசத்தந்தையருமான அந்தோனிப்பிள்ளை அவர்கள் பரலோக பிராப்தியடைந்த 2-ம் வருடம் ஆவணி மாதம் 11-ந் திகதி (11-8-59) பூர்த்தியாகின்றமையால், இத்தினம் கொழும்பு, முகத்துவாரம் அர்ச். அந்திரேசியார் தேவாலயத்தில் இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக ஓர் துக்கப்பாடற் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இதனைக்கண்ணுறும் சுற்றத்தார், நண்பர்கள், அனுதாபிகள் யாவரும் இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள்,
சகோதர, சகோதரிகள், சுற்றத்தார்.

---

### ஆசிரியர்கள் (ஆண்கள்)
### ஞான ஒடுக்கம்

கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான ஞான ஒடுக்கம் ஒன்று 21-8-61 தொடக்கம், 25-8-61 வரை கொலம்பகம், சஞ்சூசையப்பர் தாபனத்தில் நடைபெறுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேற்படி ஞானஒடுக்கத்தில் பங்குபற்றவிரும்பும் ஆசிரியர் வண. தாபனத்தலைவர் அவர்களுக்கு 12 ரூபா அனுப்பிப் பெயரைப் பதிந்து நிச்சயப்படுத்திக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

குறிப்பு: மார்கழி 10க்கும் 17க்கு மிடையில் ஆசிரியர்கட்கு இன்னுமோர் ஞானஒடுக்கம் மடுத்திருப்பதியில் நடாத்தப்படும்.

இங்ஙனம்
தங்கள் சேவைக்குரிய
**அ. சின்னப்பு**

---

### கோட்டு விற்பனவு
### விளம்பரம்

**இல. M. B. 3346**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு
கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு
1. நாகநாதர் கந்தையாவும்
2. பெண் திரையம்மாவும்
3. என். சின்னத்தம்பி கனகசபாபதியும்
4. பெண் புஷ்பராசமணியும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3346-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணிகளை 1961-ம் ஆண்டு புரட்டாசிமீ 14-ந் உ வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,499-ம், இன்னும் ரூபா 1,700-க்கு 2-5-60 தொடக்கம் 26-7-60 வரையும் 100-க்குப் 12% வட்டியும், பின் கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு 181 ரூபா 25 சதமும்.

#### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென் மேற்கிறை "பியாமையப்பிள்ளை புலமும், கள்ளப்பிறவயலும்." கிணறும், பயிர்வகைகளும், அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — நாகலிங்கம் பெண் சுந்தரத்தின் ஆதனம். வடக்கு — சுப்பர் சின்னையாவிற்கும், பங்காளருக்கும் உரியஆதனம். மேற்கு — நாகநாதர் மகள் ஆச்சிமுத்துவின் ஆதனம். தெற்கு — நா. கந்தையா பெண் திரையம்மாவின் ஆதனம். இதில் வடகிழக்குப்புறமாக பிரிவிட்ட ப. நி. இ. 1, குளி $9\frac{1}{4}$.

2 ஷ வண்ணார்பண்ணை வடமேற்கிறை பியாமையப்பிள்ளை புலம். வீடும், பயிர்வகைகளும், இன்னும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — நாகலிங்கம் பெண் சுந்தரத்தின் ஆதனம். வடக்கு — கே. செல்லத்துரைக்கும், பெண் விசாலாட்சிக்குமுரிய ஆதனம். மேற்கு — நாகநாதர் மகள் ஆச்சிமுத்துவின் ஆதனம். தெற்கு — ஒழுங்கை. இதில் பிரிவிட்ட ப. நி. இ. $1\frac{3}{4}$. இந்தத் துண்டு பியாமையப்பிள்ளை புலமும், கள்ளப்பிறவயலும் என்னும் காணியைச்சேர்ந்த துண்டு. இது நல்லூர்கோயிற்பற்று, கொக்குவில் இறையையும் சேர்ந்தது.

**சே. இரத்தினசபாபதி,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 7-8-61.

---

### கனிஷ்ட பாடசாலைத்
### தராதரப் பத்திரப் பரீட்சை
#### கார்த்திகை—1961

வடமாகாண ஆசிரிய சங்கத்தினால் நடத்தப்படும் இப்பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் பாடசாலைமாணவரிடமிருந்து 10-9-61-க்கு முன்பாகவும், தனிப்பட்டபரீட்சார்த்திகளிடமிருந்து 15-8-61-க்கு முன்பாகவும் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பழைய வினாப்பத்திரங்கள் தேவையானோர் யாழ்ப்பாணத்திலுள்ள புத்தகக் கடைகளில் வாங்கிக்கொள்ளலாம்.

1962-ம் ஆண்டுக்குரிய பாடத்திட்டங்கள், புத்தகங்கள் ஆகியனபற்றிய கருத்துக்களை 4-8-61-க்குமுன் தெரிவிக்கும்வண்ணம் கல்லூரி அதிபர்களும், மற்றையோரும் வேண்டப்படுகின்றனர்.

**C. குணபாலசிங்கம்,**
கௌரவ காரியதரிசி,
வ. மா. ஆ. சங்க,
பரீட்சைக் கவை.

உரும்பிராய் தெற்கு,
26-7-61.

---

தேவனைத் தேடும் ஆன்மாக்கள் அவரை எங்கும் காணும்; சிறப்பாய் ஏழைகளில்.

---

### கோட்டு விற்பனவு
### விளம்பரம்

**இல. M. B. 3667**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம்,
ஓரியண்டல் மலாயா வங்கி லிமிட்டெட்.
— வழக்காளி.

எதிராக

காலஞ்சென்ற, ஆறுமுகம் வேலுப்பிள்ளையின் ஆதனங்களின் தத்துவகாரி
பெரியவிளான், இளவாலை
ஆறுமுகம் வேலுப்பிள்ளையின்
கைம்பெண் கற்பகம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3667-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1961-ம் ஆண்டு ஐப்பசிமீ 7-ம் உ சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள்நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 16,000-74-ம். 30-9-60 தொடக்கம், 14-3-61வரை 12வீத வட்டியும், அதன் மேல் முழுத்தொகைக்கும்இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 409-43 சதமும்.

#### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோயிற்பற்று, நல்லூர் இறை "கணக்கன் வளவும், பண்டை வளவும்" பர. நில. இலா. ஆறும் (ப.நி. இ. 6.), வீடும், கடை கட்டிடங்களும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு—வேலன் கந்தனுக்கும், செவ்வந்திநாதன் பெண் சத்தியபாமாவுக்குமுரிய வாதனம். வடக்கு—செவ்வந்திநாதன் பெண் சத்தியபாமாவுக்குரிய ஆதனம். மேற்கு — கனகரெத்தினம் பெண் நாகரெத்தினத்துக்குரிய ஆதனம். தெற்கு—றோட்டு. இதடங்கலும்.

இவ்வாதனம் யாழ்ப்பாணம், காணிப் பதிவுக் கந்தோரில் D. 256 / 284இல் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

**செ. விசாகரத்தினம்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
நம். 133, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
1961-ம் ஆண்டு ஆவணிமீ 4-ந் உ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## வித்தியாதிபதி எச்சரிக்கின்றார்

பாடசாலைமாணவர்களைப்பற்றிய ஒருமித்தகுறிப்பேடுகளை ஒழுங்காக எழுதிவைக்கத் தவறியதாகக் கண்டு பிடிக்கப்படும் ஆசிரியர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும் சம்பள உயர்வு நிறுத்தப்படுமென்று வித்தியாதிபதி முடிவுசெய்துள்ளார். இந்த முடிவை அவர் நாடெங்குமுள்ள வித்தியாதரிசிகளுக்குத் தெரிவித்திருக்கின்றார்.

## காங்கேசன் துறைப் பட்டினசபை

காங்கேசன் துறைப் பட்டினசபையை ஒருநகர்சபைஅந்தஸ்திற்கு உயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனை நடைமுறைக்குக் கொண்டுவரு. தற்கான ஒழுங்குகளை அது தற்சமையம் செய்துவருகிறது.

## புதிய போஸ்ற்மாஸ்றர் ஜெனறல்

தற்போது இலங்கைப் போஸ்ற்மாஸ்றர்ஜெனறலாய் இருந்துவருகின்ற திரு. எச். எவ். செனிவிரத்ன வருகிறபுரட்டாதிமாதம் இளைப்பாறவிருக்கின்றார். தபாற்பகுதியில் அதிககாலம் சேவை செய்தவர்கள் என்றமுறையில் இப்பதவிக்கு அதிகம்தகுதிவாய்ந்தவர்கள் திரு. ரி. சிவப்பிரகாசம் அவர்களும், பிரதமதந்திப் போக்குவரத்து எஞ்சினியர் திரு. எஸ். இராசநாயகம் அவர்களுமே. புதியபோஸ்ற்மாஸ்றர் ஜெனறலின் நியமன விஷயமாய் வகுப்புவித்தியாசம் ஊசலாடத்தான் இடமளிக்கப்போவதில்லையென்று போக்குவரத்துமந்திரி கூறியிருக்கின்றார்.

## கோட்டில் சமுகமாகவில்லை

சுப்பிறீங்கோட்டுத்தீர்ப்பைத் தெரிந்துகொள்வதற்காகத் திரு. கே. எம். இராஜரத்தினவும், அவரோடு சேர்ந்த எட்டுப்பேரும் சென்ற3-ந்திகதி புதன்கிழமை வதுளைக்கோட்டில் சமுகமளிக்கவேண்டியவர்கள். ஆனால், திரு. இராஜரத்தின அங்குசமுகமளிக்கவில்லை. மற்றையஎண்மரும் சமுகமாகவே, அவர்களுக்குச் சுப்பிறீங்கோடு விதித்த ஒன்றரைவருடக் கடுங்காவல் தண்டனைபற்றியவிபரத்தை நீதிபதி வாசித்துக்காட்டித் திரு. இராஜரத்தினவை இம்மாதம் 28-ந்திகதியன்று கோட்டில்சமுகமளிக்கச் செய்யும்படி பொலிஸ்இன்ஸ்பெக்றர் ஜெனறலுக்கு உத்தரவிடலாயினர்.

## இளைப்பாறும் அரசாங்க ஊழியர்கள்

55 வயதடைந்த அரசாங்கஊழியர்களை இளைப்பாறச்செய்ய வேண்டுமெனச் சென்றவைகாசிமாதத்தில் தீர்மானிக்கப்படலாயிற்று. ஆனால், இத்தீர்மானம் இன்னுமே நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. 55வயதடைந்து இளைப்பாறவேண்டிய அரசாங்கஊழியர்களாய்ச் சுமார் 5,000 பேர் உள்ளனரென்றும், இவர்கள்ஒரே முறையிலே மொத்தமாகப் பென்ஷனைப் பெறுகிறதானால் இரண்டரைக் கோடிரூபா தேவைப்படுமென்றும் மதிப்பிடப்படுகிறது. இவர்கள் ஒய்வு பெற்றால் அரசாங்கபகுதிகள் எவ்வாறு பாதிக்கப்படும்; என்னசிக்கல்கள் ஏற்படும்? என்பனபோன்ற பிரச்சினைகள் பற்றிய பூரணஅறிக்கையைப்பெற அரசாங்கம் முயன்றுவருகிறது. இளைப்பாறும் ஊழியர்களினால் காலியாகும் பதவிகளில்அநேகம் சிக்கனநடவடிக்கையாக நிரப்பாமலே விடப்படுமாம்.

## ஞானவொடுக்க போதக குருமார்

வெண்ணப்புவாவைத் தலைமைஸ்தானமாகக் கொண்டிருக்கின்ற ஞான ஒடுக்க போதக குருமாருள் தமிழ் ஞானவொடுக்க போதகர்களான அதி வண. சற். என். குரூஸ், வண. எவ். ஜே. நவரத்தினம், வண. எம். அல்பிறெட் எனும் குருவர்கள் மூவரும் இம்மாத நடுப்பகுதியிலே யாழ்ப்பாணம் வந்து கொழும்புத்துறைச் சஞ்சூசையப்பர் தாபனத்தைத் தமது தலைமை ஸ்தானமாகக் கொண்டு முன்போல ஞான ஒடுக்கபோதகஞ் செய்துவருவார்கள்.

## புகையிலை, சிகறெற்விலை

சமீபத்திலே வரியேற்றம் செய்யப்பட்டகாரணமாகப்புகையிலை, சிகறெற் ஆகியவற்றின்விலைகள் உயர்த்தப்படலாயின. இந்தவரியேற்றத்தைச் சிகறெற் கம்பெனிகளேபொறுத்துச் சிகறெற்றுகளைப் பழையவிலைக்கு விற்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகின்றது. பெற்றோலின்தீர்வையை ஏற்றியபோது எண்ணெய்க்கம்பெனிகள் பெற்றோல்விலையை ஏற்றவில்லையென்றும், அதேபோல் சிகறெற்கம்பெனிகள் சிகறெற்றுகளின்விலையைக் கூட்டாதிருக்கவேண்டுமென்றும் அரசாங்கம் வற்புறுத்துவதாகத் தெரியவருகிறது. இலங்கைமக்கள் வருடந்தோறும் இருநூறுகோடிசிகறெற்றுகள் புகைத்துவருகிறார்களென்றும், சிகறெற்றின்விலையில் ஒருசதம் குறைத்தாலும் இரண்டுகோடிரூபா நட்டம்ஏற்படுமென்றும் சிகறெற்கம்பெனிகள்தெரிவித்துள்ளன.

## இளைப்பாறும் கல்வி அதிகாரிகள்

அரசாங்கஊழியர்கள் 55வயதில் இளைப்பாறவேண்டுமென்ற நிபந்தனைக்கிணங்கக் கல்விப்பகுதியைச்சேர்ந்த 14உயர்தரஅதிகாரிகள் இவ்வருட இறுதியிலே இளைப்பாறவேண்டியவர்கள். இவர்களிலே வித்தியாதிபதி திரு. எஸ். எவ். டிசில்வாவும்ஒருவர். இவருடன் சில உதவிவித்தியாதிபதிகளும், பதில்வித்தியாதிபதிகளும், கல்விமந்திரி காரியாலய உதவிக்காரியதரிசியும் 55வயதை அடைந்துவிட்டார்கள். கல்வித்துறையில் அனுபவம் வாய்ந்த பதினாலுபேரும் ஏககாலத்தில் இளைப்பாறுவது பெரும்பிரச்சினையை உண்டுபண்ணவிருக்கிறது.

## கண்டக்றர் இல்லாதபஸ்

கண்டக்றர் இல்லாதபஸ்களை விரைவிலே இலங்கைப்போக்குவரத்துச் சபை ஹெந்தலை டிப்போவிலிருந்து ஓடச்செய்யவிருக்கிறது. இந்தப்பஸ்கள் தனித்தட்டு உள்ளனவாயிருக்கும். பிரயாணிகள் பஸ்ஸினுள்ஏறும்போது சாரதி தனதுஆசனத்தில் அமர்ந்தபடியே அவர்களின்கட்டணங்களை அறவிடுவார். அதனால் கண்டக்றரின் வேலையும் சாரதியிலேயே பொறிவதாகின்றது.

## கல்விப்பகுதிஅதிகாரங்கள்

கல்விப்பகுதித் தலைமைக்காரியாலயம் தனதுஅதிகாரங்களை நாடெங்கும் அமைக்கப்படவிருக்கும் இருபதுநிலையங்களுக்குப் பகிர்ந்துகொடுக்க விருக்கின்றது. வருகிறஐப்பசிமாதத்திலே இத்திட்டம் நடைமுறைக்கு வரும்போது தலைமைக்காரியாலயத்திலுள்ள அதிகாரிகள் இந்தநிலையங்களுக்குமாற்றமாகிச்செல்லத் தயாராயிருக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

## திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்

பாராளுமன்றத்திலே காங்கேசன் துறைப்பிரதிநிதியும், சத்திரசிகிச்சைக்காக லண்டன்நகர் சென்றிருந்தவருமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்அவர்கள் எடின்பறோஆஸ்பத்திரியிலே இம்மாதம்1-ந்திகதியன்று சித்திகரமாகச்சத்திரசிகிச்சை செய்யப்பெற்றுக் குணமடைந்திருக்கிறாரென அறிகின்றோம். அவர் தமதுவேலைகளைச் செய்வதற்குவேண்டிய உடல் நலம்பெற இன்னும்ஏறக்குறைய ஆறு வாரங்கள்செல்லுமெனத் தெரியவருகிறது.

## 35வருடம் மோதம்

1958-ம்ஆண்டு வைகாசிமாதம் 29-ந்திகதியன்று வகுப்புவாதக் கலகத்தின்போது மகாஇலுப்பலம் அரசாங்கபண்ணையிலே பியதாசா, சறூனெவிஸ், ஜயசிங்கி, மட்டுமாபண்டா, கொடிகரா, காலுவா, காலுபண்டா, சிறிசேன, ஹெற்றிஆராய்ச்சி, பிரேமதாசா, குருநாதா, டொன்அராஜேலிஸ், செனவிரத்ன, டிங்கிறிபண்டாஎனும் பதினாங்குபேரும் சட்டவிரோதமாகக் கூட்டங்கூடியது, கொள்ளையடித்ததுமுதலாம் ஆறுகுற்றச்சாட்டுகளின்பேரிலே குருநாகல் சுப்பிறீங்கோட்டில் விசாரணை செய்யப்பெற்று ஆறிலும் குற்றவாளிகளாகி மொத்தமாகத்தலைக்கு 35வருடம் 6மாதக் கடூழியசிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள். தண்டனையை ஏககாலத்தில் நிறைவேற்றப்படும்.

## தீப்பெட்டியின்விலை

தமது வரவு-செலவுத்திட்டப் பேச்சில் தீப்பெட்டியின்விலையை மூன்றரைச்சதத்திலிருந்து ஐந்துசதமாகக் கூட்டியிருப்பதாய் நிதிமந்திரி கூறியிருந்தபோதிலும் அவ்விதம்கூட்டுவது பாராளுமன்றத்தின் இருசபைகளாலும் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே நடைமுறைக்கு வருமென்று அவர் தெரிவித்திருந்தார். சீனி, மா, மதுவகை ஆகியவற்றின் விலைகளைக்கூட்டியதை அரசாங்கம் விசேஷ 'கெசற்' ஒன்றின்மூலம்பிரசித்தஞ்செய்துநடைமுறைக்குக் கொண்டுவரலாயிற்று. ஆனால், தீப்பெட்டியின் விலையைக் கூட்டியிருப்பதை அரசாங்கம் அவ்விதம்செய்யவில்லை. ஏனெனில், இதற்குப் பிரத்தியேகசட்டம்ஒன்றைத் திருத்தஞ்செய்ய வேண்டும். அதுவரை வியாபாரிகள் தீப்பெட்டியின்விலையைக்கூட்டவியலாது. ஆனால், அதற்கிடையில் அதன்விலை ஏழு,எட்டுச்சதமாக ஏற்றப்பட்டுவிட்டது. அதனால், இவ்விதம்கூட்டிவிற்கும் வியாபாரிகள் மீது அரசாங்கம் வழக்குத்தொடரவிருக்கிறது.

## புதியசமாதான நீதவான்

யாழ்ப்பாணம், பிரக்கிராசியார் திரு. ஏ. அமிர்தலிங்கம்அவர்கள் ஜே. பி. எனப்படும் சமாதானநீதவானாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் காலஞ்சென்ற பிரக்கிராசியார் திரு. கே. அருளம்பலம்அவர்களின் புதல்வராவர்.

## முடிக்குரிய பிரக்கிராசியார்

பிரக்கிராசியார் திரு. சி. சி. சோமசேகரம் ஜே. பி. அவர்கள் தமதுபதவியிலிருந்து இளைப்பாறியமையால் அவரிடமாக யாழ்ப்பாணத்து முடிக்குரியபிரக்கிராசியாராகப் பிரக்கிராசியார் திரு. எம். ஆர். காராளசிங்கம்; ஜே. பி. அவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

## 2-ம்வருட மரணஞாபகம்



திருநிறைசெல்வன்
யோசவ் அன்ரனி (கிளேவர்)
பிறப்பு: 18-6-58 இறப்பு: 8-8-59

ஈராண்டு ஓடி மறைந்ததுவே எம்மகனே,
உள்ளத்தில் மூண்டகனல் நூர்ந்ததில்லை,
சீராண்ட எம்மவர் தீராத் துயர்தீர,
பாராளும் ஈசன்பதம் எம்மவர்க்காய்
வேண்டுவாயே!

மகனையிழந்து துயருறும்:
எம். விக்ரர் இம்மானுவேலும், பாரியாரும்
வால்ரர் (தமையனார்)

உதயதிசை,
ஊர்காவற்றுறை.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. 2616

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

ஊர்காவற்றுறை நாரந்தனை
சி. நா. குணரெத்தினம்
— வழக்காளி

எதிராக, நாரந்தனை
பாவிலு அந்திரேசு நேரடியாகவும், பாவிலு அந்திரேசுவின் காலஞ்சென்ற மனைவி இன்னேசியின் சொத்தின் பிரதிநிதியாகவும் — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2616-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணிகள் 1961-ம்ஆண்டு செப்ரம்பர்மீ 9-ந்உ (9-9-61) சனிக்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,668. மேலும் ரூபா 1,000-க்கு 25-5-60திகதிதொடக்கம் 12-7-60திகதிவரைக்கும் வருடமொன்றுக்குப் 12%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 258ரூபா 77சதமும். இதில் ரூபா500 கொடுபட்டிருக்கிறது.

**காணிகளின் விபரம்**

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுகள்பகுதி ஊர்காவற்றுறை கோயிற்பற்று நாரந்தனையிறை "சண்டைக்கடை, சண்டைக்காடு" ஏக்கர் 1, பேச்சஸ் 12-உம், கிணறும், வீடுகளும். இதற்கு எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — "சண்டைக்காடு" என்றழைக்கப்படும் முடிக்குரிய ஆதனம். மேற்கு — மரிசால் சேவிங்குக்குரிய ஆதனம். தெற்கு — நீக்கிலான் ஞசைக்குரிய ஆதனம். யாழ்ப்பாணம் பதிவு C 320/249.

2. ஷை நாரந்தனையிறை வெள்ளிடைமாகல்" நிலப்பரப்பு 10-உம், பனைகளும். இதற்கு எல்லை: கிழக்கு — இராமலிங்கம் சுந்தரம்பிள்ளைக்குரிய ஆதனம். வடக்கு — V. M. முத்தையாவுக்குரிய ஆதனம். மேற்கு — வஸ்தியாம்பிள்ளை மனைவி மரியாய்ப்பிள்ளைக்குரிய ஆதனம். தெற்கு — அந்தோனிப்பிள்ளை சுவக்கீம்பிள்ளைக்குரிய ஆதனம். அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளைக்குரிய ஆதனத்தினதும், செபஸ்தியாம்பிள்ளை மனைவி மரியாய்ப்பிள்ளைக்குரிய ஆதனத்தினதும் மேற்கெல்லைநெடுக இவ்வாதனத்திலிருந்து மேற்கிலிருக்கும் ஒழுங்கைக்கு வழிப்பாதை உரித்தும். இதடங்கலும் யாழ்ப்பாணம் பதிவு இல. C 242/213.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொம்மிஷனர்.

63, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை, 28-7-61.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆவணி மாதம்—1961

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | ஞா. | 2 | பெந்தெக்கோஸ்தின்பின் 12-ம் ஞாயிறு (வி. ம.) | ப |
| 14 | தி. | | தேவமாதாவின் ஆரோபணத்திருநாளின் ஆயத்தநிதனம் (அர்ச். எயுசேபியார்) | ஊ |
| 15 | செ. | 1† | தேவமாதாவின் ஆரோபணம் (வி. ம.) | வெ |
| 16 | பு. | 2 | தேவமாதாவின் தந்தையாகிய அர்ச். சுவக்கின் | வெ |
| 17 | வி. | | அர்ச். கியாசிந்தப்பர் | வெ |
| 18 | வெ. | ம | காலதினம் (ஞாயிறு பூசை; அர்ச். அகப்பித்தர் ஞா.) | ப |
| 19 | ச. | | அர்ச். இயூட் அருளப்பர் | வெ |

சத்திய வேத

**பாதுகாவலன்**

1961-ம் ஆண்டு
ஆவணிமாதம் 12-ந் திகதி

## கண்டனக் குரல்

இன்று எவரைப்பார்த்தாலும், எவருடன்சம்பாஷித்தாலும் அரசாங்கத்தின் புதியவரிகளைப்பற்றித்தான் பேச்சாயிருக்கிறது. இந்தவேளை சிலருக்கு ஒருவித ஞானமும் உதயமாகின்றது. சிகறெற்புகைப்பதை நிறுத்தவேண்டும; மதுபானம்அருந்துவதை நிற்பாட்டிவிடவேண்டும்; மோட்டர்கார்களை விற்றுவிடவேண்டும்; அநாவசியமான செலவுகளையெல்லாம் அடியோடு போக்கிவிடவேண்டுமென்றெல்லாம் ஆற்றங்கரைக் குரங்குகள் போன்று ஏற்கனவே அவர்கள் மனக்கோட்டைகட்டத் தொடங்கிவிட்டனர். அவ்வாறாக, நிதிமந்திரியின் புதியவரவுசெலவுத்திட்டம் நல்லசோஷலிஸ்த திட்டமென்று ஆரம்பத்திலே வாயாரப்புகழ்ந்த கம்யூனிஸ்தகட்சிப் பிரமுகர்ஒருவருக்குத் திடீரென இப்போது ஞானோதயம் -அதாவதுமெய்யறிவு தோன்றிப்போலும் அரசாங்கம் விதித்துள்ள சிலமுட்டாள்தனமான வரிகள் புதிய வரவு-செலவுத்திட்டத்தில் காணப்படும் வரவேற்கத்தக்க பல நல்லஅம்சங்களை மறைத்துவிட்டனவே; மாவின்விலை இறாத்தல்ஒன்றுக்கு ஐந்து சதவீதம் உயர்த்தப்பட்டிருப்பது தவிர்க்கப்படவேண்டும; கிராமியமக்கள் இதனால் அதிகசங்கடம் அடைவார்கள்; நடுத்தரவகுப்பினரையும் புதியவரிகள கடுமையாகப் பாதிககின்றன; மாதம் ஒன்றுக்கு 500 ரூபாவுக்குமேல் வருமானமுடையவர்களுக்கே இந்தவரிகளை விதிக்கலாமேதவிர 300 ரூபா வருமானமுடையவர்களிலிருந்து அவைகளைத் தொடங்கக்கூடாதென ஆர்ப்பரிக்கின்றார்.

மறுபக்கத்தல் சமசமாஜகட்சியினரோ இன்றையஅரசாங்கத்தின் முன்னேற்றசெயல்களை ஆதரித்துப பிற்போககுச் சக்திகளின சதிவேலைகளிலிருந்து அதனைப் பாதுகாக்கும் கொள்கையைவாறாகக் கடைபபிடித்தபோதிலும் புதியவரவு-செலவுத்திட்டத்தாலே மக்கள்மீது சிலஅநாவசிய வரிகள் சுமத்தப்படுவதையிட்டு அதனைஎதிர்க்கும்படி— எதிர்த்து வாக்களிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளார்கள். நிதிமந்திரி தனதுவாக்குறுதிக்குமாறாக மக்களின் உணவுவிஷயத்தை நேர்முகமாகத் தாககிவிட்டாராம்; தீப்பெட்டியின்விலையை ஒன்றரைச் சதவீதம் ஏற்றுவதின்மூலம் ஏழைமக்களையுமே தாக்கும்படி செய்துவிட்டாராம்; சீனி, மா, தீப்பெட்டிவிலைகளை நிதிமந்திரி உயர்த்தாமலிருந்தால் மிகநன்றாயிருக்குமாம்; சில்லறைவியாபாரிகள், நல்லசம்பளம்பெறும்தொழிலாளிகள் வாழ்க்கைப் போராட்டத்திலிருக்கும் நடுத்தரவகுப்புமக்கள் ஆதியோரெல்லாம் பளுவான வரிச்சுமைக்குள்ளாகிவிட்டனராம்; அத்தியாவசியகப் பொருட்களெல்லாம் உச்சவிலையிலுள்ள இச்சந்தர்ப்பத்திலே இந்த மாதிரியான வரிச்சுமைகள் திணிக்கப்படுகின்றனவேயென்று குரலெழுப்புகின்றனர்.

நிற்க. வாழ்க்கைச்செலவைக் குறைப்பதாகப் பண்டாரநாயகா அரசாங்கங்கள் வாக்குறுதிஅளித்தபோதிலும் அவ்வாக்குறுதிகளை அவைகள் நிறைவேற்றவில்லை; அதற்குப்பதிலாக அவைகள் பொதுமக்களுக்குச் சொல்லொணுக்கஷ்டங்களை உண்டுபண்ணியிருக்கின்றன; அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்ட யோசனைகளாலே இன்றுதொழிலாளர் பாணுக்கும், சீனிக்கும், சிகறெற்றுக்கும், தீப்பெட்டிக்கும் அதிக விலைகொடுக்க வேண்டியவர்களாகிவிட்டனர்; ஏழைமக்கள் 300 ரூபாவுக்குமேல் சம்பாதித்துவிட்டால் அவர்களிடமிருந்துஅரசினர் வருமானவரியெடுக்கவிருக்கின்றனர்; அதனால் ஆயிரக்கணக்கான இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியரும், துறைமுகஊழியரும், வர்த்தகஸ்தாபன ஊழியர்களும் இவ்வரியைச் செலுத்தவேண்டியுள்ளனர்; 25 சதப் பங்கீட்டரிசி வசதிதானும் வருமானவரி செலுத்துவோரிடமிருந்து பறிக்கப்படுகிறது; வாழ்க்கைச்செலவோ விஷம் போல ஏறிவருகிறது; வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரிக்கப் போகிறது; நாட்டின்நிதிநெருக்கடிக்கு இந்தஅரசாங்கமே பொறுப்பென ஞாபகப்படுத்தியிருக்கிறேனென்று எதிர்க்கட்சித்தலைவர் திரு.டட்லி செனநாயக்கா முழங்குகின்றார்.

பொருள்பண்டங்களின் விலையேற்றத்தினாலும், அதிகரித்துவரும் வாழ்க்கைச்செலவினாலும் உத்தேச றேஷன்வரியினாலும், தேசீயஅபிவிருத்திவரிஎனும் சம்பளவெட்டினாலும் தாங்கள்பாதிக்கப்பட்டிருப்பதாகவும், திரு.பண்டாரநாயக்கா வலதுகையால் கொடுத்த 17ரூபா 50சதத்தையும் சிறிமாபண்டாரநாயக்கா இடதுகையால் பறித்தெடுக்க முயற்சிப்பதாகவும் அரசாங்கஊழியர்கள் தலையிலே கைவைக்கின்றனர். இந்தநிலைமையிலே எதிர்க்கட்சித்தலைவரின் பொய்ப்பிரசாரங்களில் மக்கள்எடுபட்டுவிடக்கூடாதென்றும், இன்றையஅரசாங்கம் ஏழைகள்மீது வரிவிதிக்கவில்லையென்றும், வரிகளைச் செலுத்தக் கூடியவர்கள்மீதுதான் வரிகளை விதித்திருக்கிறதென்றும், புதியவரவு-செலவுத்திட்டம் நடுத்தரவகுப்பினரை ஓரளவு பாதிக்கலாமாயினும் தேசீயநலனைமுட்டு ஒவ்வொருபிரசையும் சிறிதளவாவது இன்று தியாகஞ்செய்யத் தயாராயிருக்க வேண்டுமென்றும் மந்திரிமாரும், அரசாங்ககட்சியினரும் விளம்புகின்றனர். பொதுவிலே சீனி, கோதுமைமா, தீப்பெட்டி, பாண் ஆகியவற்றின்விலைகள் அதிகரிக்கப்பட்டதையிட்டும், மாதம் 300 ரூபாவுக்குமேல் சம்பளம்பெறுகிறவர்களிடமிருந்து நான்குசதவிகிதம் அபிவிருத்திவரியும், வருமானவரி செலுத்துவோரிடமிருந்து உணவுவரியும் அறவிடப்படவிருப்பதையிட்டும் கண்டனமேயல்லாது அவற்றிற்குச் சந்தோஷமான வரவேற்பில்லை.

# எரிய மறுத்த கப்பல்

கல்லடிச் சித்தன் போனவழி காடு மேடு எல்லாம் தவிடுபொடி என்று வாழ்ந்தனர் முரட்டுவண்டல்ஸ்கள். இவர்கள் ஆரியமதபேதத்தினர். குனறிக்அவர்களின் அரசன். அவனது ஆட்சியின ஏழாம்ஆண்டில் கிறிஸ்துவர்களுக்கு விரோதமாகக் கலாபனைத் தீயை மூட்டிவிட்டான்.

ஆரியபதிதம் கிறிஸ்துவைக் கடவுள் என ஏற்கவில்லை. கிறிஸ்துவர்கள் அக்கொள்கையை ஏற்கவேண்டும், அல்லது உயிரை இழக்கவேண்டுமெனச் சாதித்தான்அரசன் சந்நியாசமடங்களைத் தரைமட்டமாக்குவதும் அவனுடைய கட்டளையில் அடங்கும்

பைசாசீன்மாகாணத்தில் கப்சாவுக்கு அண்மையிலிருந்த மடத்துத் தலைவர் லிபொராட்டுஸ் இதை அறிந்தார். மடத்தை இடிக்கவந்த சேவுகரின் தலைவன், "உம்மைக் கார்த்தேசுக்கு அழைத்துவரும்படி அரசன் கட்டளையிட்டிருக்கிறான்" என்று அறிவித்தான்.

கட்டளைக்குத் தலைசாய்த்தார் மடாதிபர். சகோதரசந்நியாசிகளை அழைத்துக் கட்டளையைத் தெரிவித்தார். அவர்கள் அறுவர்: பொனிப்பாஸ், சேர்வுஸ், றுஸ்டிக்குஸ், றேபேட்டுஸ், செப்ரிமுஸ், மக்சிமுஸ். சிலநாட்கள் சென்றபின் மடாதிபரும், சந்நியாசிகளும் கார்த்தேசுக்குவந்து சேர்ந்தார்கள். நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். "அரசர் தாராளமனம் காட்டுகிறார்; கடந்துபோனவைகளை மறந்து; உங்கள் எதிர்கால வாழ்வைச் சேமமாக்குவார், ஆரியக்கொள்கைகளை நீங்கள் கைக்கொண்டால்," என்றான் நீதிபதி. "அரசனின் உதாரத்தைப்பற்றி நீங்கள் சந்தேகப்படத் தேவையில்லை. நீங்கள் ஞானிகள்; உண்மையை உணரக்கூடியவர்கள்."

சந்நியாசிகள் எல்லோரும் "கர்த்தர் ஒருவர்; விசுவாசம் ஒன்று; ஞானஸ்நானமும் ஒன்றே," எனப் பதிலிறுத்தனர். "எங்கள் உடல்களை நீங்கள் எதுவும் செய்யலாம்; நீங்கள் வாக்குப் பண்ணும் செல்வங்கள் நிலையற்றவை; அவைகளை நீங்களே வைத்திருங்கள்."

"என்னபாடுபடுவீர்கள்என அறியாமற் பேசுகிறீர்கள், நண்பர்களே!" என எச்சரித்தான் நீதிபதி. "ஒருசில வார்த்தைகள்தான் பேசவேண்டும். பேசினால் துன்பம் தொலையும். இழவுக்குப்பதில் இன்பம்வந்துசேரும்."

திரித்துவ சருவேசுரனிலும், ஞானஸ்நானத்திலும் அவர்கள் கொண்ட விசுவாசத்தை மறுக்கச்செய்ய முயற்சிப்பது வீண் எனத் தோன்றியது. "விலங்குமாட்டிச் சிறையிலிடுங்கள்" எனக் கர்ச்சித்தான் நீதிபதி. சிறையிலிருந்த ஏழுபேரும் தங்களுக்கு என்ன நேருமோ என அறியாதிருந்தார்கள்.

குனறிக் கொதித்துக் கொண்டிருந்தான். ஏழு சந்நியாசிகளும் அடைபட்டிருந்த மறியற்கூடத்தை அநேக கிறிஸ்துவர்கள் தரிசிப்பதாகக் கேள்வியுற்றான். வந்தவர்களுக்குப் புத்திபோதனைகள் சந்நியாசிகள்கூற, கிறிஸ்துவர்கள் அவர்களுக்கு ஆறுதலும் தேறுதலும்கூறி, கிறிஸ்துவுக்காகத் துன்பப்பட உறுதியாயிருக்கும்படி ஏவினர். அதற்குக் காவலாளர் துணை புரிந்தனர்.

"காவலரைக் கட்டில் போடுங்கள்" என உறுமினான் குனறிக்; "புதிதாக இரட்டிப்பான காவல் வையுங்கள்; இப்படித் திரும்பவும் நிகழாதிருக்கக் கவனமாயிருக்க வேண்டும். அன்றேல் தலைகள் பல மண் கௌவும்." கடுஞ்சிறையில் வைத்தும் சந்நியாசிகளின் மனம் இளகவில்லை. அதைக் கண்ட மன்னன் ஓர் முடிவு செய்தான்.

"சந்நியாசிகள் மனம் மாறுகிறார்களில்லை. எனது கட்டளைகள் எல்லாம் செவிடன் காதிற் சங்கநாதம் ஆகிவிட்டன. ஆகவே, அவர்களைப் பழைய கப்பலில் ஏற்றி, கடலில் தீக்கு இரையாக்குங்கள்," என்றான்.

கொடுங்கோலனின் கூளித்திட்டம் நிறைவேறும் நாள் வந்தது. சந்நியாசிகள் துறைமுகத்துக்கு மலர்முகத்துடன் சென்றனர். வீதிகள்தோறும் நின்ற ஆரியர் நிந்தித்தனர். துறைமுகத்தில் பழுதுபட்ட கப்பல் ஒன்று அவர்களைக் காத்துநின்றது. அது எரிவதை இலகுவாக்க விறகு நிறைய அடுக்கியிருந்தது. சந்நியாசிகள் அதில் ஏறினதும் இருகப்பல்கள் அதை ஆழிக்கு இழுத்துச் சென்றன. கொஞ்சத்தூரம் சென்றதும் பழையகப்பலைக் கட்டியிழுத்த கம்பங்களை அவிழ்த்துவிட்டாகள். பின்பு, இழுத்துச் சென்றகப்பலிலிருந்த சேவுகர் இருவர் நெருப்புடன் பழைய கப்பலில்வந்து, கப்பலின் மேற்தட்டில் குவித்திருந்த விறகுகளுக்கு நெருப்பு வைத்தனர். வைத்தவுடன் இருவரும் தமது கப்பலில் ஏறிக்கொண்டனர்.

பழைய கப்பலுக்கு நெருப்பு வைத்தாலும் அதுபற்றி எரியவில்லை. சந்நியாசிகள் தம்பாட்டிலிருந்து செபித்துக் கொண்டிருக்கக் காணப்பட்டனர். சேவுகருடன் சென்ற கப்பல் திரும்பி வந்தது; திரும்பவும் நெருப்பு வைக்க எத்தனித்தனர். பயனில்லை.

கரையிலிருந்து வேறொருகப்பல் புறப்பட்டது. அதில்அரசனிடமிருந்து ஒரு செய்தி. நெருப்புப்பற்றாத கப்பலைக் கரைக்குக் கொண்டுவரும்படி கட்டளைவந்தது. ஏழுசந்நியாசிகளும் கரையை அடைந்ததும் கப்பலைவலிக்கும் தண்டுகளால் மண்டையில் அடித்து, அவர்களை நொருக்கிக் கொன்றனர். கடலில் எறியப்பட்ட அவர்களுடைய சடலங்களைக் கிறிஸ்துவர்கள் காப்பாற்றி, அர்ச். கிளறினுஸ் ஆலயத்தருகிலிருந்த சந்நியாசமடத்தில் அடக்கஞ் செய்தனர். இவர்களுடைய திருநாள் **ஆவணிமாதம் 17-ந்திகதி.**

## துணைச் சிரேஷ்ட சுவாமியார்

வெண்ணப்புவாவிலே ஞானவொடுக்க போதக குருமாரின் தலைவராயிருந்து வருகிறவரான அதிவண. சற். என். குரூஸ் சுவாமிபவர்கள் யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் திருத்தொண்டாற்றி வருகின்ற அமலோற்பவ மரியநாயகிசபைக் குருமாரின் துணைச்சிரேஷ்டராக (விக்கார் புறோவின்ஷல்) நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடுத் திரு சேத்திரத்தின் நடுநாயகமான
# பரிசுத்த செபமாலை மாதா

ஸ்ரீலங்காவின் ஞானவளம்பெருந்திய கத்தோலிக்க திருசேத்திரங்களுக்கெல்லாம் ஒருநடுநாயகம்போலத்திகழ்வது மருதமடுவெனில் மிகையாகாது. அத்திருசேத்திரத்தை நினைக்குந்தோறும் ஞானமனோகரம் பிறக்கும். கானகத்திடையே எழுந்தருளிக் காட்சியளிக்கும் வானோர்க்கரசியான செபமாலைஇராக்கினியின் திவ்வியசந்நிதானத்தை நோக்குந்தோறும் ஞானனந்தம் பெருக்கெடுக்கும். ஆடிமகோற்சவமாய் இருந்தாலென்ன, ஆவணிமகோற்சவமாய் இருந்தாலென்ன, வேறெந்தமகோற்சவமாய் இருந்தாலென்ன, பக்தர்களின் மனங்களையெல்லாம் அஃது கவர்ந்திழுக்கும். அதனால் அவர்கள் பல்வேறுநகர்கள், பட்டினங்கள், கிராமங்களிலிருந்து மருதமடுத் திருசேத்திரத்தைநாடி, ஆங்கு திரிலோக நாதனைத் தமது திருக்கரத்தில் தாங்கியவராய்த் திவ்வியசிம்மாசனங்கொண்டெழுந்தருளியிருக்கும் பரமநாயகியின் திருப்பாதாரவிந்தங்களைத் தேடிச் சமயபேதம், சாதியபேதமின்றியே திரள்திரளாய்ச் சரியத்தொடங்குவார்கள்.

பூர்வத்திலே தேவப்பிரசைகளான இசிறவேல்சாதியார் பாலுந்தேனும் பெருகும் கானான்தேசத்தின் கடைசியெல்லைகளினின்றும் ஜெருசலேம் தேவாலயத்தை நோக்கித் திருயாத்திரையாகப் புறப்பட்டுத் தேவநாமத்தைப் புகழ்ந்துகொண்டும், திவ்விய கீதங்களைப் பாடிக்கொண்டும் பக்திப்பரவசத்துடன் செல்லுங்காட்சியைக் கண்ணுறும்போது அஃது ஓர்அபூர்வ காட்சியாய் இருக்குமாம். அவ்வாறே ஸ்ரீலங்காவின் கடைசிஎல்லைகளினின்றும் மருதமடுத் திருசேத்திரத்தை நோக்கிப் பக்தகோடிகள் யாத்திரை புறப்பட்டுத் தேவதாயாரையும், அவரது திருக்குமாரனையும் துதித்துக்கொண்டும், திவ்வியகீதங்களைப் படித்துக்கொண்டும், இசிறவேலர் 150 இராகமுடையதாய்இசைத்த அதிசய வாத்தியத்தின் அறிகுறியான 153 மணிச்செபமாலையைப் பயபக்தியாகச் செபித்துக்கொண்டும் செல்வதைக்கண்ணுறுமிடத்து அஃதும் அபூர்வகாட்சியாய் இருக்குமன்றோ!

அன்று சங்கிலிமன்னன் யாழ்ப்பாண இராச்சியத்திலே ஆட்சிபுரிந்தகாலத்தில் மன்னார்வாசிகள் கத்தோலிக்க திருமறையைத் தழுவஆரம்பித்தார்கள். தென்னிந்தியாவிலே அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் அயராமுயற்சியால் கத்தோலிக்கசமயம் அதிகம் தீவிரமாகப் பரந்துவருகிறதெனக் கேள்வியுற்ற மன்னார்மக்கள் தாங்களும் அதில் சேரவேண்டுமெனத் தீராதஆவல் கொண்டனர். அதனால் அந்தச் சத்தியசுடர் தங்கள்மத்தியிலும் ஒளிரச்செய்யவேண்டுமென்று அவரை வேண்டிநின்றனர். அவர்களின் வேண்டுகோளுக்கு அவரும் செவிசாய்த்தார். தம்முடனிருந்த வண. பிரான்சீஸ் சவேரியார்சுவாமியாரை மன்னாருக்கு அனுப்பிவைத்தார். அவரும்வந்து வேதபோதகதொண்டில் தீவிரமாகஈடுபட்டார். சிறிதுகாலத்திலே மன்னார் கத்தோலிக்கசமயத்தின் நிலைக்களமாயிற்று. பின்னர் மன்னாரின் சுற்றுடல்களிலும், மற்றும் கிராமங்களிலும், மாந்தையெனும் ஊரிலும் பரந்துகொண்டது. இதனை அறியவந்தான் சங்கிலிமன்னன். அடங்காத சினங்கொண்டான். ஆயுதபாணிகளான ஐயாயிரம்வீரர்களுடன் மன்னாரிலே படையெடுத்தான். மன்னார் வாசிகளைப் பழிவாங்கத்தொடங்கினான். அவர்களிலே ஒருயௌவனரான வண. பிரான்சீஸ் சவேரியார் சுவாமிகள்உட்பட ஆடவர்களும், பெண்களும், பிள்ளைகளுமாக எழுநூறுபேர் வரை வாளுக்கிரையாகி உதிரஞ்சிந்தி வேதசாட்சிகளானார்கள்.

இவ்விதம்மன்னாரில் வேதகுழப்பங்கள் நடைபெறும்போது மாந்தையில் வசித்திருந்த கத்தோலிக்கர் போர்த்துக்கேயரின் உதவியைக்கொண்டு அங்கு ஒருபெரிய கத்தோலிக்கஆலயத்தைக் கட்டிமுடித்தனர். தற்சமையம் மருதமடுத்திருப்பதியில் எழுந்தருளி



யிருக்கும் பரிசுத்தசெபமாலை இராக்கினியின் அழகியதிருச்சுரூபம் அத்தேவாலயத்தில் பூச்சியமாகஸ்தாபிக்கப்படலாயிற்று. அவ்வாறாகப் போர்த்துக்கேயரைத் தொடர்ந்து இலங்கையைஆட்சிகொண்ட கல்வீனியபுறொட்டஸ்தாந்தர்கள் சங்கிலிமன்னனுக்குப்பின் கத்தோலிக்கசமயத்தை மீண்டும் அழிக்கத்தொடங்கினார்கள். அவர்கள் 1669-ம்ஆண்டு மாந்தையைத் தாங்கள்கூடும் தலமாக்கவே மாந்தைக் கத்தோலிக்கமக்களான இருபதுகுடும்பத்தினர் 1670-ம்ஆண்டு தாங்கள் மதித்தற்கரிய பொக்ஷமாகப்பேணிப் பாதுகாத்துவந்த செபமாலைமாதாவின் திருச்சுரூபத்தையும் தங்களுடன்எடுத்துக்கொண்டு அங்கிருந்துவெளிகொண்டு பலநாள் கானகமத்தியில் அலைந்தபின் கடைசியாக ஒருசிறுகிராமத்தைக்கண்டு அதிலேகுடியேறினார்கள். அந்தக்கிராமமே இன்று மருதமடுவாகக் காட்சியளிக்கின்றது. அதில்கோவில்கொண்டெழுந்தருளியிருப்பதாலேயே மாதாவும் மருதமடுச் செபமாலை மாதாவென்று அழைக்கப்பெறுகின்றார்.

உலாந்தாக்காரர்கடாத்திய வேதகலாபனையின்போது தம்முடையதாசர்களுடன் மருதமடுத்திருப்பதிக்கெழுந்தருளியதுமுதல் அத்திருசேத்திரத்திலேயே அவர் நிரந்தரமாக எழுந்தருளியிருந்து காலந்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களைத் தம்பால் ஈர்த்து கணக்கற்ற அனுக்கிரகங்களைப் புரிந்துவருகின்றார். ஓ! பரமஆண்டவளே! அக்காலத்திலே உலாந்தாக்காரரதுவேதகலாபனையின்போது தமது பக்தர்களுடன் மடுப்பதிக்கெழுந்தருளியதுமுதல இதுவரை தாம்செய்துள்ள அற்புதங்களுக்கு ஓர்அளவுண்டாமோ! இகபரநன்மைகள் இம்மட்டென்று சொல்லுந்தரமாமோ! பெற்ற தாயிலும் மிக்கபேரன்புள்ள தாயே! பூரண சந்திரோதயம்போன்ற தமது திருப்புன்னகையையும், கருணைமழைபொழிகின்ற தமதுதிருவிழிகளையும், சாந்தம் ததும்புகின்ற தமதுதிருமுக மண்டலத்தையும் கண்ணுற்றபின்னரும் தம்மிலே அன்பு பாராட்டவும், தமதுஅடைக்கலத்தைநாடவும் தமது திருப்பாதாரவிந்தத்தைத் தேடவும் மனங்கொள்ளாதிருக்கும் மாந்தருமுண்டேயாமோ?

மலையேபோன்று எம்மை இடுக்கண்கள்பல எதிர்கொண்டுவரலாம்,

மலையேபோன்று எம் திருமறையை இன்னல்கள்பல எதிர்கொண்டுவரலாம்,

மலையேபோன்று எம்மனதைக் கவலைகள்பல எதிர்கொண்டு வரலாம்,

மலையேபோன்று எம்மை வறுமையும், சிறுமையும் எதிர்கொண்டு வரலாம்,

மலையேபோன்று எம்மை உலகம், சரீரம், பிசாசு எதிர்கொண்டுவரலாம், எம்மை வாட்டலாம், வருத்தலாம், இடர்செய்யலாம், இம்சைப் படுத்தலாம், ஆனல்,

மலைமீதேற்றிய மணித்தீபம்போன்று செபமாலை நாயகியே! நீர் மருதமடுத் திருப்பதிக்கண் என்றும்போல

எம்தாயாக எழுந்தருளியிருக்கும்போது எமக்கு அச்சம்ஏது? அங்கலாய்ப்பு ஏது?

ஆவலுடனே வந்திட்டோம்
ஆவிமூன்றும் தந்திட்டோம்
பாவவிலங்கை அறுத்தருளும் [ளும்
பண்ணும்பிழைகள் பொறுத்தரு
சீவசலத்தை வார்த்தருளும்
சென்மதோஷம் தீர்த்தருளும்
கோபமதவிர்த்தே மன்றும்
குலவும்மருத மடுத்தாயே!

நாரைஅறியாக் குளமுண்டோ
நமனைஅறியா உயிருண்டோ
பேரைஅறியாப் பிள்ளையுண்டோ
பிடித்தோம்உந்தன் அடிக்கமலம்
காரையிழந்த பயிர்போலக்
கருகிமடிந்தோம் மன்றும்
மாரியெனவே வரமருளும்
மங்காமருத மடுத்தாயே!

●

பஞ்சம்படையில் ஆழ்ந்திட்டோம்
பாழும்நோயில் வீழ்ந்திட்டோம்
நெஞ்சம்புண்ணாய் அலைந்திட்டோம்
நீதிநேர்மை குலைந்திட்டோம்
அஞ்சுமடக்கி வழிநில்லோம்
அரியகுரவர் மொழிகல்லோம்
தஞ்சம்நீரே மன்றும்
தாங்கும் மருதமடுத்தாயே!

## மருதமடுச் செபமாலை நாயகியின்பேரில்
# பாடப்பட்ட பக்திக்கவிகள்

ஆசிரியர்: வி. எஸ். பிள்ளை
(அர்ச். மரியநாயகி சிரேஷ்ட தமிழ் ஆண்பாடசாலை—சிலாபம்)

மருதமடுத்திருப்பதியின் இரண்டாவது மகோற்சவம் ஆவணிமாதம் 15-ந் திகதி பக்திச் சிறப்புகளுடன் கொண்டாடப்படுகின்றது. பல ஆயிரக்கணக்கான கத்தோலிக்க மக்களின் வருகையைக் கண்டுகளிக்கக் கூடியதாய் இருக்கும் இத்தலத்தில் கிருபாசனங்கொண்டெழுந்தருளியிருக்கும் அர்ச். செபமாலை மாதாவின் அருட்பிரசாதங்கள் அளவிடற்கரியன. அற்புதவாத்தியான செபமாலை அன்னையின் மகத்துவங்களைப் புகழ்ந்துபாடி வேண்டுதல்செய்யும் முறையில் முற்காலத்தில் கத்தோலிக்க தமிழ்ப் புலவர்களால் பாடப்பட்ட கவிதைகளும், பாடல்களும் அனந்தம். அவற்றுள் திரைவிருத்தங்கள் என்ற வகையில் பாடப்பட்டுள்ள பாடல்களில் சுவையான சிலவற்றை இங்கு தருகின்றேன் :—

1

கறக்கின்ற பசுவினைக்காணாத கன்றுபோல் கதறிப் பதைத் தழுவேனே
கானகந் தன்னிலே வழிதப்பி மாய்ந்திடும் காளைபோல் நொந்தழுவேனே
சிறகற்றபட்சியென அங்குமிங்குந் தப்பித்தேங்கியே நொந்தழுவேனே [வேனே
தீயரது வாய்தனிலே தேரைபோலே வெருண்டு திசைதப்பிக் கொண்டழு
அறமற்ற பாவியான் ஆர்துணையு மற்றேனென் றலறிச் சிதைந்தேனம்மா
ஆச்சியே யென்குரலைக் கேளாதிருக்கிலென் ஆரென்னைக் கேட்பதம்மா
செறிகந்த நற்சோலை பலசூழும் மோட்சச் சிங்கார மருதமடுவில்
செகசோதி வடிவமாய் மதிவாகனத்தில்வரும் செபமாலை மரியன்னையே.

2

வார்தங்கு தவிதரசர் மரபில் மகராசினி மனுவோர்கள் புகழ் ராக்கினி
மங்காத சங்கைமீது பொங்கி வளர்சாயினி மதபத்தி சீலியினி
கார்தங்கு கடலில்விழு புதல்வனைக் காத்து ரெட்சித்தவளும் நீ
கருதரிய சிறுமிதனை இருவர்பிடி நீக்கியே வருதுயரை நீக்கியவள் நீ
பார்தங்கு பலசனர்கள் பவமகன்றிடவே பாதுகாத் திட்டவளும் நீ
பாவியானுந்தனது பாதபொற்பத மலர் பணியவும் அருள்புரியும் நீ
சீர்தங்கு பொய்கையில் சில்வரால் குதித்திடும் சிறப்புடைய மருதமடுவில்
சித்திர மணியொத்த ஒளிவைத்த பத்திராசனச் செபமாலை மரியன்னையே.

3

அன்னை நீ தந்தை நீ உன்னையல்லாதெனக் காருதவி செய்குவாரில்
வனிதவனி நிதமென்று பிரியதத்தங்களை அறிந்தவோர் வாலிபர்க்கு
இன்னிலந்தனிலரிய நன்மை செய்தவனுலகு இழந்தபின் பரகதிக்கே
ஏகவருள் செய்த கிருபாகரத்தாயே இயம்பு விண்ணப்பமது கேள்
வன்னுலக இடைவிடாத் தன்னையே மாற்றலால் வளர்பவக் கொடுமையால்
மருவுபிணிதுயர் கவலை வறுமைகளகன்றுமே வடியுறு பதந்தேடவும்
தின்னருங் கனியென உன்னுதரமேதங்கு திருமகவை வேண்டியருள்வாய்
திருமருவு மருதமடு அதனில் வளர்பரிசுத்த செபமாலை மரியன்னையே.

4

வருமாலை தற்பரன் வரிமாலை யும்பர்தொழு வானுலகாள் செல்விமாலை
வைடூரியம் பச்சை நிரை நிரையாகவே வைத்துத் தொடுத்தமாலை
உருமாலை தாவீது குலமாலை அலகையினம் ஓடிக் கலங்குமாலை
உத்தமர் தவமாலை உயர்மனுவேலை ஒப்பில்லாக் கிருபைமாலை
ஒருமாலை ஆனுளின் தவமாலை சூசையோடு கோர்த்திட்ட கற்புமாலை
சீர்பரவுஞ் சோலைசூழ் சிங்காரமடுவிலுறை சிங்காதனத் தெழுந்தமாலை
திருமாலை ராஜேஸ்வரிமாலை என்குறைகள் தீர்த்தருள் நவமாலையே
செகசோதி வடிவமாய் மதிவாகனத்தில்வரு செபமாலை மரியன்னையே.

5

மாணிக்கமொடு பச்சை வைடூரியம்நீல மரகதம் கோமேதகம்
மற்றும்பல ரத்தினம் கஸ்திவேண்டாதிவை மதிக்கொணு விலையுயர்ந்த
காணிக்கை பெறுமுனது சரணினைக்காணவே கருதியிவ் வாலயத்தைக்
கருவிடாய் கொண்டு புலிகரடிபல மிருகமுள கானகந்தாண்டி வந்தேன்
நாணிப்பதுங்கி நல்லூணற்ற அரிவயர நாடித் திரிந்தே தாயின்
ஞானச்சுடர் முடிகண்டுற்ற பிணிகவலை நாடாது ஓடியகல
சேணிக் கலேணிகை மீதுற்ற அன்னையும் சேயை மன்குடியருள்வாய்
திருமருவு மருதமடு வதனில் வளர்பரிசுத்த செபமாலை மரியன்னையே.

சீவியத்தின் எந்நிலையும் அததற்குரிய ஆபத்தைக் கொண்டுள்ளது. ஆயினும், வாலிபவயசுதான் ஒருவனை அதன்வலையிற் சிக்குண்ணப் பண்ணுவது. நற்குணங்களை மனதிற் பதிக்கும் வசந்தகாலம் இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## "பூவுலகை வென்றவளே வருக, மேலுலக அரசியாய் ஆண்டருள்க!"

**அன்புமிக்க இளைஞர்களே!**

கன்னித்தாய்க்குக் கிடைத்த பல சலுகைகளில் அவளது மோட்ச ஆரோபணமும் ஒன்று. எல்லோரும் உலகமுடிவிலே ஆத்தும சரீரத்தோடு உயிர்ப்பார்கள் என்பது பொதுச்சட்டம். ஆனால், கன்னிமரியம்மாளோ மரித்த உடனேயே உன்னதசேவனின் முன்னிலையில் ஆத்தும சரீரத்தோடு எழுந்தருளிச் செல்லலானார்.

"உனக்கும் ஸ்திரிக்கும், உன்வித்துக்கும் அவளுடைய வித்துக்கும் பகையை உண்டாக்கிவைப்போம்; அவள் உன் தலையை நசுக்குவாள்" (ஆதி. 4, 15) என்று தேவன் ஏதேன் தோட்டத்தில் பாம்பைப்பார்த்துச் சொல்லியருளிய இவ்வார்த்தைகள் தேவனின் தாயைக்குறித்தே சொல்லப்பட்டன. இவைகள் நேரடியாக அவளது ஆரோபணத்தைக் குறித்துச் சொல்லப்படவில்லை.

ஆயினும், 1870-ம் ஆண்டில் நடந்த வத்திக்கான் பொதுச்சங்கத்தில் 200-க்கு மேற்பட்ட மேற்றிராணிமார்களும், மற்றவர்களும் இவ்வாக்கியத்திற்குக் கொடுத்தவிளக்கம் இதுவே:—"கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்குமிடையில் நடக்கும் கடும்போரில் கன்னித்தாயும் தனிப்பட்டமுறையில் தன் மகனோடு சேர்ந்திருக்கிறாள். பசாசின்மேல் கொண்ட வெற்றியால், கிறிஸ்துவானவர் பாவம், ஆசாபாசம், சாவு இம்மூன்றையும் வென்றார். அவர் தாயாரும் இவ்வெற்றியில் பங்குபற்றுவது சரியே.

சென்மபாவமில்லாமற் பிறந்ததால் பாவத்தை வென்றாள்; ஆகையால், தமது ஆரோபணத்தால் சாவையும் வென்றிருக்கவேண்டும். அல்லாவிடில் சாவு "ஸ்திரீயை" வென்றுவிட்டது என்று சொல்லவேண்டியிருக்கும்.

இவ்விளக்கத்தை ஆதாரமாகக்கொண்டு 1950-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 1-ம் திகதி, பரிசுத்த 12-ம் பத்திநாதபாப்பரசர் தேவதாயாரின் ஆரோபணத்தை ஒரு வேதசத்தியமாய் யாவரும் விசுவசிக்கும்படி பிரகடனப்படுத்தியருளினார். "கடவுளின் அமலோற்பவத்தாய், எப்போதும் கன்னிகையான மரியாய், தனது உலக வாழ்வின்முடிவில் ஆத்துமத்தோடும், சரீரத்தோடும் பரலோக மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாள் என்பது சர்வேசுரனால் வெளியிடப்பட்ட சத்தியமென நாம் வரையறுத்து உறுதியுடன் அறிக்கையிடுகிறோம்" என்பதுவே.

"பூவுலகை வென்றவளே வருக,
மேலுலக அரசியாய் ஆண்டருள்க!"

என்று சம்மனசுக்கள் பாடும் கீதத்துடன் நாமும் அத்தாயாரை "பூலோக மேலோக ராசேஸ்வரி நமோ" என்று வாழ்த்திப்போற்றுவோமாக.

ஞானப்பிதா

## நின்று காப்போரும் சேவை செய்வோரே!

யோண் மில்ற்றன் என்பவர் பிரசித்திபெற்ற ஆங்கிலக் கவிஞர். 17-ம் நூற்றாண்டில் சீவித்தவர். தமது 42-ம் பிராயத்தில் கண்ணொளியை இழந்தார்; அவ்வேளை அவர் அடைந்த சோகத்தையும், இறுதியில் "நின்று காப்போரும் சேவை செய்வோரே!" என்னும் பரந்த நோக்குடன் தேவ ஏற்பாட்டிற்குத் தன்னை அவர் கையளித்த விதத்தையும் கூறும் அவரின் கவிதை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளது.

என் வாழ்நாளின் அரைப்பகுதி இன்னமும் இருள்சூழ்
இவ்விரியுலகில் இருக்கையிலே
என் கண்கள் ஒளியிழந்துவிட்டன—என்கவி ஞானத்தால்
என் சிருஷ்டிகரைச் சேவித்து அவர் பழி கூறுதபடி
என் மெய்க்கணக்கை ஒப்புவிக்க என் ஆன்மா வேட்கையுற்றிருந்தும்
என் மரணம்வரை அக்கொடை பயனின்றி
என்னுள் மறைந்திருப்பதைச் சிந்தித்தபொழுது
கண்ணொளியை மறுத்தபின்னும் என் பணியைக்
கண்டிப்பாய் இறைவன் எதிர்பார்க்கிறாரா? எனப்
பேதைமையாய் என்னை நான் வினவியபொழுது
பொறுமை என்னையதட்ட
"மனிதன் கொடையும் பணியும் — இறைவனுக்கு வேண்டியதில்லை
அவரளிக்கும் சிறுமைகளை மனமுவந் தேற்போரே
சிறப்போடவரைச் சேவிப்போராவர்; மாட்சிமைமிக்க மன்னர் அவரே
அவராணையிடும் சணத்திலேயே செயலாற்ற நீரிலும், நிலத்திலும்
அநேகாயிரம் தூதர் அவருக்கு உண்டு.
நின்று காப்போரும் சேவை செய்வோரே" எனக் கூறியது உள்ளம்.

எச்சக்திக்கும் மேற்பட்ட, அல்லது தாம் தராதுவிட்ட அவயவங்களின் பணியைத் தேவன் எம்மிடம் கேட்கமாட்டார் என்பதே மேற்கூறிய கவிதை போதிக்கும் படிப்பினையாகும். தேவன் எமக்கு அளித்த தத்துவங்களை இயன்ற அளவில் பயன்படுத்தி அவரைச் சேவித்தல் போதும். இதைத் தந்திருந்தால்; அதை எடுக்காதிருந்தால் இன்னும் இன்னும் அதிகமாகச் செய்யலாம் என அங்கலாய்ப்புக்கொள்ள வேண்டியதில்லை.

## நண்பிக்கு ஒரு புத்திமதி

யாழ்ப்பாணம்,
31-7-60

எனது பிரிய நண்பி அறிவது.

அநேகநாட்களின் பின்னர் அனுப்பிய அன்புமடல் கண்டு ஆனந்தமடைந்தேன்.

மேலும், உம்மிடத்தில் விளங்கும் அகந்தை என்னும் அழிவுக் குணத்தை அறவே அகற்றித் தாழ்மையிற் தழைத்தோங்கி வளராவிட்டால் எதிலும் நீர் முன்னேறமுடியாது. நரகத்தின் நச்சுத் திறவுகோல் அகங்காரமாகும். சருவேசுரனின் சம்பூரண அருள்களைப்பெற்ற சம்மனசுக்கள் முதலாய் அகந்தைக் குணத்தினலேயே நரகத்திற்குட்பட்டனர். மறுவுலகில்மட்டுமல்ல, மண்ணுலகில் முதலாய்த் தேவன் அகங்காரிகளைத் தண்டிக்கிறார். நாளை நம் நாட்டில் நல்லதொரு நற்சமுதாயத்தை அமைக்கும் ஆற்றலும், அறிவும் படைத்த நீர் அகந்தை என்னும் குணத்தை அகற்ற முயற்சிக்காமல், முன்னின்று நற்சமுதாயத்தை உருவாக்க உழைப்பதெங்ஙனம்? இன்று நம்நாடு சீரழிந்து, சீர்கெட்டு, அமைதியற்று, அல்லற்படக்காரணம் அகங்காரமே என்று நாம் கூறலாம். உம்மைப்போன்ற அகங்காரக் குணம்படைத்தோர் பலர் பாரில் பரந்துகிடக்கின்றனர். இவர்களே இன்று இறைவன் இல்லை எனச் சாதித்து நாஸ்திகம் பேசுகின்றனர். அகங்காரம் அகன்று போனால் அகிலம் அமைதியடையும். ஆகவே, இத்தீய குணத்தை நீர் திருத்தி அமைக்க ஆரம்பிக்கவேண்டும்.

தாழ்மையை என்றும் நீர் அனுசரித்தால் அகந்தையை அடக்கலாம். சாந்தம், பொறுமை, கீழ்ப்படிதல், தற்பரித்தியாகம், சுயவெறுப்பு, தன் குற்றங்களை ஏற்றுக்கொள்ளுதல், மௌனம் இவைகளே தாழ்ச்சிக் கிரிகைகளாகும். நான் என்ற நய வஞ்சகச்சொல் உமது உள்ளத்திலும் உதட்டிலுமிருந்து புறப்படா வண்ணம் பாதுகாரும். நம்மைப் புண்ணியம் என்னும் புனிதபாதையிற் பழக்கி வான்வீடு அழைத்துச் செல்லும் அணிகலன் தாழ்மையாகும். தாழ்மையைக் கடைப்பிடிப்பவன் உண்மையில் ஓர் உன்னத அர்ச்சியசிஷ்டர் என நாம் துணிவுடன் உலகறிய உரைக்கலாம். படாதபாடுபட்டும் பல புண்ணியப் புனிதர்கள் இத்தாழ்மையை முற்றாகத் தம் வாழ்வில் கடைப்பிடித்தொழுகமுடியாது போய்விட்டிருக்கும்போது, பலவீனமுள்ள பரம பாவிகளாகிய யாம் இப்புண்ணிய வாழ்வைக் கடைப்பிடித்தல் சுலபமான செயலன்று. இப்புனித வழியை நாடும்போது ஏற்படும் இன்னல்களையும், தோல்விகளையும்கண்டு அஞ்சற்க. ஏனெனில், தோல்வியே வெற்றியின் சின்னமாக அமையக்கூடும். மண்ணுலகவாழ்வு மறைந்துவிடும்; ஆனால், விண்ணுலக வாழ்வோ பரிபூரண இன்பந்தரும் முடிவற்ற பெருவாழ்வாகும். இப்பெருவாழ்வைப் பெற நாம் இப்புவியில் அல்லற்படத் தயங்குவது முறையாகுமா? வாழ்க்கை என்பது வரண்ட பாலைவனம். சிந்திப்பவனுக்கு அதுவோர் சிறந்த பூங்காவனம் என நம் பெரியார் கூறியது போல், நாம் நமது வாழ்வைச் சீர்ப்படுத்தச் சிந்திக்கவேண்டும். ஆண்டவரின் அன்புத்தேவதிரவிய அனுமானங்கள் மூலமாகவும் அன்னைமரியின் அருட்துணையாலும் தாழ்மையை உம்மிடம் வளர்க்கமுடியும். உமது வாழ்வு சீர்பெற்றிலங்க அன்புள்ள திருத்தாயாரிடம் வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
உமதன்புள்ள நண்பி
"சுசிலா"


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல: M. B. 2185.**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

வட்டுக்கோட்டை கிழக்கு
சிதம்பரப்பிள்ளை செல்லப்பா
கைம்பெண் நாகம்மா
— வழக்காளி.

எதிராக
வட்டுக்கோட்டை
தற்போது வண்ணார்பண்ணை கிழக்கு
1. மயில்வாகனம் அப்பாசாமி
மயில்வாகனம்
வட்டுக்கோட்டை கிழக்கு
2. மாரிமுத்தர் ஆறுமுகம்
நாராயணசாமி
3. பெண் மனோன்மணி
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2185-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர் துண்டுக்காணி 1961-ம் ஆண்டு புரட்டாசிமீ 16-ந்வ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3,620 சதம் 25. இன்னும் ரூபா 3000-த்திற்கு 8-5-58 தொடக்கம் 1-9-58 வரையும் 100-க்கு 9%வட்டியும்பின்பு கூட்டுத்தொகைக்குஇறபடும்வரைக்கும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 219ரூபா 55சதமும்.

**காணி விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம்மேற்கு வட்டுக்கோட்டை கோயிற்பற்று, வட்டுக்கோட்டைமேற்கிறை 'நெட்டிசிட்டி." இது குறித்த யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 4131-ம் இலக்கப் பிரிவிடுதல்வழக்கில் சேவையர் சே. டி. வீரசிங்கம்என்பவரால் 1949-ம் ஆண்டு ஆனிமாதம் 13-ந்திகதி அனைக்கப்பட்ட 2470-ம் இலக்கப்பிளானில் கண் [illegible] நான்காம் லொட் என்று குறிப்பிட்டிருக்கும்துண்டு. இதன் விசாலம் பரப்பு, நில. இலாச்சம் மூன்றும், குளி எழும் பதினாறில் மூன்றுபங்கும், கல்வீடுகளும், மாற்கொட்டிலும், கிணற்றில் அரைவாசியும், வான்பயிர் செய்பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கு — கண்ணகியம்மன் கோயிலுக்குரிய ஆதனம். வடக்கு — வயிரவசுவாமி கோயிலுக்குரிய ஆதனம். குறித்த பிளானில் சொல்லப்பட்ட 2-ம், 3-ம்துண்டுக் காணிகளும். மேற்கு — குறித்த பிளானில் சொல்லப்பட்ட 3-ம், 1-ம் துண்டுக்காணிகள். தெற்கு — கணபதிப்பிள்ளை கைம்பெண் இராமாசிப்பிள்ளைக்குரிய ஆதனம். இந்த எல்லைப்படி இதடங்கலும், இதைச் சேர்ந்தவைகள் அனைத்தும்.

**செ. இரத்தினசபாபதி,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 7-8-61


## நன்றி ஸ்துதி

மருதமடுத் திருப்பதியில் கிருபாசனம் கொண்டிருக்கும் பரிசுத்த செபமாலை மாதாவே, பரலோக பூலோக அரசியே, பாவிகளின் தஞ்சமே, ஆதரவற்றவர்கள் அன்னை நீரே, உம்மீது முழு நம்பிக்கையும் வைத்தேன். பல வைத்தியர்களாலும் கைவிடப்பட்டுப் 12 வருடகாலம் நோய்கண்டு வருந்தி, 28 நாள் பாயும் படுக்கையுமாகக் கைகால்வழங்காதிருந்த எனது மகன் இருதயராசா 28-ந் திகதி வெள்ளிக்கிழமை 10மணியளவில் மாதா கிருபையால் உடனேதானே படுக்கையை விட்டெழுந்து தான் பெரியமடு அன்னையிடம் போகவேண்டுமென்று பரிபூரண சுகத்துடன் எழுந்துநடந்தார். எங்கள் குடும்பத்தின் தாழ்மையான நன்றியறிதலை எங்கள் தாயாரான செபமாலை அன்னைக்குச் செலுத்துகிறோம். மென்மேலும் உமது சலுகையையிரந்து, இதை எங்கள் குடும்பத்தினரின் சார்பாகப் பிரசித்தப்படுத்துகிறோம்.

வ. சலமோன்

கேம்ப்றேட், ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

## தேம்பாவணி - நாட்டுப்படலம் விளக்கவுரை

(வித்துவான் ச. சி. ஞானப்பிரகாசம்)

2. போர்ப் புறங்கொடு பொருந்தலர் உரத்திறேய்த் தொளிர்வேல்
சீர்ப் புறங்கொடு திசைதொறு மிருளற. மின்னி
வார்ப் புறங்கொடு வளர்முர சொலியென வதிர்ந்து
நீர்ப் புறங்கொடு நீன்முகில் முழங்கின மாதோ.

(இ—ள்) கடலிற் குடித்த நீரையெல்லாம் தம்மிடத்தே கொண்டுவிளங்கிய கார்மேகங்கள் போர்க்களத்தை எய்திப் பகைவருடைய மார்பில் உருவிப் பாய்தலினலே தேய்ந்து விளங்குகின்ற அரசர்க்கரசனுகிய தாவீதனது வேலாயுதத்தின் தன்மைபோலத் திக்குகளெங்குமுள்ள இருள் அகலும்படி மின்னி வாரைப்புறத்திலே கட்டிய முரசினது எல்லாத் திசைகளிலும் பரவிய பேரோசையைப்போல ஆகாயமெங்கும் பேரொலி செய்தன.

சுருங்கச் சொல்லல்பற்றி 'ஒளிர்வேல்' எனப் பொதுப்படக் கூறினரேனும், அந்நாளில் எருசலேமில் இருந்து அரசுசெய்தவன் மாமன்னனுகிய தாவீதனதின் அவ்வேலாயுதம் அவனுக்கேற்றப்பட்டது. பொருந்தலர் உரத்திற் தேய்த்து ஒளிர்வேல் மின்னலுக்கும், வளர் முரசொலி இடிமுழக்கத்திற்கும் உவமைகள். பண்புந் தொழிலும் பற்றியன. கார்மேகங்கள் மின்னி முழங்கின. கடல்நீரைப் பருகியபின்னரே மேகம் கரியனவாகத் தோன்றுமென்பார் 'நீர்புறங்கொடு நீல்முகில்' என்றார். எல்லாப்புற நாடுகளும் அவ்வரசனது ஆணைக்குட்பட்டனவே என்பார் 'வளர் முரசொலி' என்றார்.

போர் = போர்க்களம்.
"ஒட்டிய பகைஞர்வந் துருத்த போரிடை" — கம்பரா. அயோ. மந் 22.
"போர் பீடழித்த செருப்புகழ்" — பதிற்றுப்பத்து 14.

புறம் = இடம்
"கரிபுற சுட்டில் கண்டனள் பெயர" — சிலப் 15 ; 32.
"உள் அகம் புறம் இல் இடப்பொருள் உருபே" நன்னூல் ; வேற்றுமை.

பொருந்தலர் = பகைவர்
"பொற்பிறங்க லிலங்கை பொருந்தலர்" — கம்பரா. சுந்தர. சூளா 17.

உரம் = மார்பு
"ஊடுற உரந்தொளைத் துயிருணுவகை" — கம்பரா. அயோ. ஆறு 50.
"வலியுடை யுரத்தின் வான்பொற்றுளி" — பெருங். இலாவா. 18 ; 13.
"அகலமே மருமநெஞ்சே ஆகமே உரமே மார்பாம்" சூடாமணி 2, 90.

தேய்த்து = தேய்ந்து
"தேய்பிறை இரும்புதம் வலக்கை சேர்த்தினர்" — சீவக. 55.

ஒளிர்வேல் = விளங்குகின்ற வேலாயுதம்
"ஒளிறுவேல் நரபதி நகர மொய்யென" — சீவக. 1617.
"ஒளிறுவேல் இளையர் தேர்நீ றழைஇ" — பெருங். உஞ்சை 33 ; 84.

சீர் = தன்மை, சிறப்பு
"சாரச் சென்றதன் சீர்கெழு செல்வமும்" — பெருங். மகத. 3 ; 117.

திசை = திக்கு
"செவ்வழி யுள்ளத் தண்ணல் தென்திசைச் செங்கைகூப்பி"
— கம்பரா. அயோ. குக. 38.

இருளற = இருள் இல்லாமற் போகுமாறு
"எல்லா மாந்தர்க்கும் இருளற விளங்கும்" — பெருங். நரவா. 7 ; 90.

வார்முரசு = வார் கட்டிய முரசம்
"ஆருணியரசன் வார்பிணிமுரசம்" — பெருங். மகத. 24 ; 62.
"பிணிறுவார் முரசிற் சாற்றி" — சீவக. 200.

நீன்முகில் = நீலமேகம்
"நீலமேக நெடும்பொற் குன்றத்து" — சிலப். காடுகாண். 35.
"நீனிற முகிலிடைக் காமுறத்தோன்ற" —பெருங். இலாவா. 6 ; 146.

அதிர்ந்து = பேரொலி செய்து
"அதிர்குரல் முரசின் அதிர்தலானுது" —பெருங். உஞ்சை. 49 ; 86.

எனக் கம்பர், திருத்தக்கதேவர், இளங்கோவடிகள், கொங்குவேள் முதலிய புலவர்கள் கூறியிருப்பது காண்க.

"அன்னங் கண்படு தண்பணை நிடதநா டளிக்கு
மன்னர் மன்னவன் மண்டமர் கடந்தவெள் வேலின்
மின்னியாங் கவன் முரசென விண்ணிடை யதிர்ந்து
பொன்னங் குன்றின்மே லவன்கொடை போன்மெனப் பொழிந்த"

என நைடதத்துள், நிடதநாட்டு மன்னனது வேலாயுதம் மின்னலுக்கு உவமையாகவும், அம்மன்னனது முரசுமுழக்கம் இடிமுழக்கத்துக்கு உவமையாகவும், அம்மன்னனது கொடை மழைப்பொழிவுக்கு உவமையாகவும் அதிவீரராம பாண்டியன் கூறினர். இவ்வாறே வீரமாமுனிவரும், தாவீதரசனது வேலாயுதத்தை மின்னலுக்கு உவமையாகவும், அவனது முரசுமுழக்கத்தை இடிமுழக்கத்துக்கு உவமையாகவும் கூறுகின்றார்.

முரசுமுழக்கத்துக்கு இடிமுழக்கத்தை உவமைகூறுவோர் மிகப்பலர்.
"உரந்தலைக்கொண்ட உருமிடி முரசமொடு" — திருமுருகாற். 121.
"முரசதிர் பவைபோல் முழங்கிடிபயிற்சி" — பரிபாடல். 4 ; 22.
"இடியுமிழ் முரசம்" — அகநானூறு 354.
"கோலமார்முர சிடியுமிழ் தழங்கென முழங்க" — சீவக. 2392.
"இடியார் பணைதுவைப்ப" — பு. வெ. உழிஞை 27.

எனப் பழந்தமிழ் இலக்கியங்களுட் பயின்று வருவது காண்க.

3. படையெ னச்செருப் பகைதரப் படர்ந்தன வல்லாற்
கடையெ னச்செறி கலிணையோ டுளுற்றிய வள்ளர்
கொடையெ னச்செழுங் குன்றொடு வயின்றொறுங் குளிர
மிடையெ னச்சொரி வியன்முகில் வரைவில பொழிய.

(இ-ள்) நிறைவாக மழைபொழிகின்ற தடித்த மேகங்கள், போர்க்களத்தில் பகைசெய்யும்படிஎழுந்த சேனைகளைப்போல ஆகாயத்திற் பரவிச்சென்றமை

## கொலம்பகம் புனிதவளனார் ஆசிரியபயிற்சிக் கலாசாலை

### 1960-ம் ஆண்டு நடைபெற்ற அரசாங்க பரீட்சையில் பின்வரும் ஆசிரியர்கள் சித்தி எய்தியுள்ளனர்

| இலக்கம் | | ஆண்கள் | பத்திரத்திகதி |
|---|---|---|---|
| CL. 1. | திரு. | லா. அதிரியான் குரூஸ் | 1-2-61 |
| ,, 2. | ,, | டா. அல்பேட் தம்பிநாயகம் | ,, |
| ,, 3. | ,, | பே. அந்தோனிப்பிள்ளை | ,, |
| ,, 4. | ,, | செ. அன்ரெனிப்பிள்ளை | ,, |
| ,, 5. | ,, | யோ. பெனடிக்ற் | ,, |
| ,, 6. | ,, | வ. பெ. ஞானப்பிரகாசம் | ,, |
| ,, 7. | ,, | சி. ஜெர்மானிஸ் | ,, |
| ,, 8. | ,, | வி. யே. சூசைரத்தினம் | ,, |
| ,, 9. | ,, | ச. யோசேப் மாக் | ,, |
| ,, 10. | ,, | ஆ. மலக்கியாஸ் | ,, |
| ,, 11. | ,, | ம. மரியதாஸ் | ,, |
| ,, 12. | ,, | அ. மரியதாசன் குலாஸ் | ,, |
| ,, 13. | ,, | சு. முடியப்பு | ,, |
| ,, 14. | ,, | பா. பேதுருப்பிள்ளை | ,, |
| ,, 15. | ,, | ஞா. ம. பீற்றர் | ,, |
| ,, 16. | ,, | ம. இராசேந்திரம் | ,, |
| ,, 17. | ,, | பா. சத்தியசீலன் | ,, |
| ,, 18. | ,, | செ. சூ. லெம்பேட் | ,, |
| ,, 19. | ,, | சி. தார்சீசியஸ் | ,, |
| ,, 20. | ,, | மோ. தார்சீசியஸ் | ,, |
| ,, 21. | ,, | வ. அந்தோனிப்பிள்ளை | 1-4-61 |
| ,, 22. | ,, | சூ. இ. எ. பெர்ணண்டோ | ,, |
| ,, 23. | ,, | வ. பவுலிஸ் பெர்ணாந்து | ,, |
| ,, 24. | ,, | வ. வி. வி. இ. லோவ் | ,, |
| ,, 25. | ,, | வ. வி. தமெல் | ,, |
| ,, 26. | ,, | சூ. ஞானப்பிரகாசம் | 1-5-61 |
| ,, 27. | ,, | மு. சிங்கராயர் | ,, |
| | | **பெண்கள்** | |
| ,, 28. | செல்வி | அ. ம. டெய்சி பெர்ணண்டோ | 1-2-61 |
| ,, 29. | ,, | கி. க. மங்களநாயகி | ,, |
| ,, 30. | ,, | மு. கி. கமிலா | ,, |
| ,, 31. | ,, | தீ. கிளாறு தியோபிலின் | ,, |
| ,, 32. | ,, | வ. லோ. ஐரின் மோர்சியா பெர்ணண்டோ | ,, |
| ,, 33. | ,, | அ. ஜெ. பார்பறு குறூஸ் | ,, |
| ,, 34. | ,, | ற. லில்லி பீற்று | ,, |
| ,, 35. | ,, | அ. லூ. மேரி பெனடிற்றம்மா | ,, |
| ,, 36. | ,, | ஞா. மகேஸ்வரி | ,, |
| ,, 37. | ,, | அ. மரியநாயகி | ,, |
| ,, 38. | ,, | மோ. மரியராணி அடைக்கலம் | ,, |
| ,, 39. | ,, | யோ. மரியம்மா | ,, |
| ,, 40. | ,, | ச. மரியம்மா | ,, |
| ,, 41. | ,, | மரியா கலிஸ்ரா கோமஸ் | ,, |
| ,, 42. | ,, | கு. மரிய ஸ்ரெல்லா | ,, |
| ,, 43. | ,, | வ. மேரியம்மா | ,, |
| ,, 44. | ,, | மேரி கெலன் கிறேஸ் வெந்தக்கோன் | ,, |
| ,, 45. | ,, | சூ. மேரி ஸ்ரெல்லா | ,, |
| ,, 46. | ,, | வ. பே. பற்றீசியா பெர்ணண்டோ | ,, |
| ,, 47. | ,, | ஞா. பிலோமினு | ,, |
| ,, 48. | ,, | கி. பிலோமினு | ,, |
| ,, 49. | ,, | யோ. பிலோமினு | ,, |
| ,, 50. | ,, | நீ. பிலோமினம்மா | ,, |
| ,, 51. | ,, | அ. இராசலெச்சுமி | ,, |
| ,, 52. | ,, | பே. பீற்று பேணடேற் | ,, |
| ,, 53. | ,, | சி. பீற்று குணமணி | ,, |
| ,, 54. | ,, | செ. செல்லம்மா | ,, |
| ,, 55. | ,, | வ. அ. திரேசா பெர்ணண்டோ | ,, |
| ,, 56. | ,, | அ. விக்ரோறியா | ,, |
| ,, 57. | ,, | வ. பி. கேட்றூட் பெர்ணண்டோ | 1-4-61 |
| ,, 58. | ,, | வ. ம. பீற்று பெர்ணண்டோ | ,, |
| ,, 59. | ,, | கு. ம. றெஜீனு பெர்ணண்டோ | ,, |

10-8-61

சுவாமி வ. தியோகுப்பிள்ளை
அதிபர்.

மாத்திரமேயன்றி, கடைசியில் உயிர்களிடம் வைத்துள்ள நிறைந்த இரக்கத்தோடு இரப்போர்க்கு வேண்டியவற்றை வேண்டியவாறே அளிக்கின்ற வள்ளியோரது கொடையைப்போல வளம்மிகுந்த மலைப்பகுதிகளோடு மற்றைய இடங்களும் குளிர்ச்சியடையும்படி அளவில்லாமற் பொழிந்தன என்பதாம்.

கார்மேகங்கள் பகைதர எழுந்த படைபோல ஆகாயத்திற் பரவிச்சென்று, கருணைநிறைந்த வள்ளியோர்போல அளவில்லாமல் மழையைப் பொழிந்தன.

வியன்முகில் உவமேயம். செருப்பகைதர எழுந்த படை உவமானம். ஆகாயத்திற் பரவிச்செல்லுதல் பொதுத்தன்மை.

மீண்டும், மிடையெனச்சொரி வியன்முகில் உவமேயம்.
கருணையோடுளுற்றிய வள்ளர்கொடை உவமானம்.
வரைவில பொழிதல் பொதுத்தன்மை.
வள்ளியோர் தானங்கொடுத்தற் பொருட்டுத் தமது பொக்கிச சாலையி

(அடுத்தபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## திரையுலகில் அர்ச். அசீசியார்

ஹொலிவுட் என்ற சினிமாக் கம்பனி பரிசுத்த பிரான்சிஸ் அசீசியாரின் வாழ்வைச் சினிமாப்படமாக எடுத்துள்ளது. முதன்முறையாக இப்படம் ஜூலை 5 ஆம் நாள் புதன் அன்று டப்ளின், சான் பிரான்சிஸ்கோ, நியூயார்க், அசீசிஎனும் நான்கு நகரங்களிலும் திரையிடப்பட்டது. "கத்தோலிக்கரெல்லோரும் கண்டு ஆதரிக்க வேண்டிய படம். படத்தின் அரிய போதனைக்காக மட்டுமன்று, இன்றைய சினிமா உலகில் இருக்கும் அசுத்தப்படங்களுக்கு ஒரு சாட்டையாக இருக்கும் இப்படத்தைக் கத்தோலிக்கர் ஆதரிக்கவேண்டும்" என்று கூறுகிறது 'சைன்' எனும் கத்தோலிக்க பத்திரிகை. வத்திக்கானே இப்படத்திற்கு ஆதரவு அளித்துள்ளது. நடிகர்கள் பிரான்சிஸ்கன் ஆச்சிரமத்திற்குள்ளேயே சென்று படமெடுக்க வத்திக்கான் அனுமதித்தது; பிரான்சிஸ்கன் சந்நியாசிகள் தங்கள் ஒத்துழைப்பை அளிக்குமாறும் கேட்டுக் கொண்டது. கலர்ப் படங்கள் சிறந்த முறையில் எடுக்கப்பட்டுள்ளன.

* * *

## யெருசலேமில் திருக்கல்லறை ஆலயம் திருத்தியமைக்கப்படுகின்றது

நமது ஆண்டவருடைய திருச் சடலம் புதைக்கப்பட்டிருந்த திருக் கல்லறை மேல் கட்டப்பட்ட ஆலயம் பல கிறிஸ்துவச் சபைகளுக்குச் சொந்தமானது. தற்போது அது பாழடைந்து விழும் நிலையில் உள்ளது. பல சபைகளுக்குச் சொந்தமாக இருப்பதால், யார் அதைப் பழுதுபார்ப்பது, யார் செலவை ஏற்றுக்கொள்வது என்பதுபற்றி ஒற்றுமை யுணர்ச்சி இல்லாமலிருந்தது இவ்வளவு காலம். ஆனால் ஜூலை 3 ஆம் நாள் திங்களன்று ஆலயத் திருத்தவேலை ஆலயத்தின் தென் சாலையில் தொடங்கியுள்ளது. அங்குதான் ஆண்டவர் சடலம் கிடத்தப்பட்ட "அபிஷேகக் கல்" உள்ளது. 1958 ஆம் ஆண்டு பெப்ருவரி திங்களில், ஆலயத்திற்கு உரிமை கொண்டாடும் கத்தோலிக்க, கிரேக்க, அர்மீனியன் சபைகளும் திருத்த வேலையை ஒன்றித்துச் செய்யவேண்டுமென ஒத்துக்கொண்டன. மூன்று சபைகளும் சேர்ந்து 13,000 டாலர்கள் (ரூ. 65,000) சேர்த்து, வேலையைத் தொடங்கியுள்ளன.

## விமானம் வாங்கினார். மேற்றிராணியார்

கொங்கோவில் போர்ட் ரூஸ்லே மேற்றிராசனத் தலைவர் வேர்ஹில் ஆண்டகையவர்கள், காலதாமதமின்றித் தமது மேற்றிராசனப் பங்குகளைச் சந்திக்குமாறு சிறு ஆகாய விமானமொன்று வாங்கியிருக்கிறார்.

தமது மேற்றிராசனத்தில் போக்குவரத்துச் சாதனங்கள், வசதிகள் மிகக் கடினமும், பணச்செலவுமானவை என ரோமை வேதவிருத்திச் சங்கத்திற்குக் கூறலாயினர். ஒவ்வொரு பங்கிற்கும் ஒரு லொறி, அல்லது பலமானகாரும் மோட்டர் வள்ளமும் தேவை, சனங்களை விசாரணைசெய்ய என்றார்.

* * *

## ஒக்ஸ்போட் தொழிலாளர் கல்லூரியில் ஏராளமான மாணவர்

ஒக்ஸ்போட், கத்தோலிக்க தொழிலாளர் கல்லூரியில் அடுத்த ஆண்டு சேரவிருக்கும் 45மாணவரில் 24பேர் பிரித்தானியாவைச் சேர்ந்தவர்கள். இப்படியான தொகையினர் இதற்கு முன் சேரவில்லை.

பிரித்தானிய மாணவரில், முதன் முறையாக ஒருவிவசாயியும், இளங் கிறிஸ்துவ தொழிலாளர் இயக்கங்களுக்குச் சேர்ந்தவர்கள் இருவரும் உளர். இந்தக்கல்லூரியின் சேவையைப் பெருக்க அவசியமான கட்டட நிதிக்கு உதவுமாறு வண. உவாட்ட ஹவுஸ், சே. ச. அறிக்கை விடுத்திருக்கிறார். பட்டணத்துக்கு வெளியேயிருக்கும் இக்கல்லூரியைச் சீக்கிரம் ஒக்ஸ் போட்டுக்குக் கொண்டுசெல்ல உத்தேசமும் உண்டு.

* * *

## கினியாவில் கத். பாடசாலைகளை அரசாங்கம் கைப்பற்றியதற்கு எதிர்ப்பு

மார்க்சியவாதியான ஜனாதிபதி செக்கு ரூறெயின் ஆட்சியில் இருந்துவரும் கினியாவில்உள்ள கத்தோலிக்க மேற்றிராணிமார்கள், அங்கிருந்த வேதபோதக ஆரம்பபாடசாலைகளில் $\frac{2}{3}$ பகுதியை அரசாங்கம் அநீதியானமுறையில் கைப்பற்றியதற்குச் சாத்வீக முறையில் எதிர்ப்புக்காட்டியிருக்கின்றனர்.

"தாங்கள் பெற்றுவளர்த்த தங்களின் செல்வச்சிறார்களுக்கு உகந்த கல்வியைத் தெரிவது பெற்றோரின் உரிமையும், கடமையும்" இது மரிசுத்ததிருச்சபையினதும், ஐக்கியதேசியத்தினதும் முக்கிய சுதந்திர உரிமைகளில் ஒன்றாகும். இந்த அடிப்படை உரிமைக்கு இடையூறுபுரியாமல், உரிமைக்கு உறுதியளிக்கும்படி மேற்படி அரசாங்கத்திடம் கேட்டிருக்கின்றனர்.

புதிய பாடசாலைகட்கு அங்கீகாரம் கொடுக்காமலும், சாதாரண பாடசாலைகளைக் கைப்பற்றியும், பாடசாலைக்கட்டிடங்களில் குடியேறியும் ஆசிரியர்களை அரசாங்கசேவையில் சேர்த்தும், கத்தோலிக்க பாடசாலைகளைக் கைப்பற்றியுள்ளனர். இவ்வாறு, 44 பாடசாலைகள் அரசாங்கத்துக்கும், கத்தோலிக்க முகாமைக்கும் எவ்வித உடன்படிக்கையும் இல்லாமல் கைப்பற்றப்பட்டன என மேற்றிராணிமார் தொடர்ந்து கூறியுள்ளனர்.

இப்பாடசாலைகள் எல்லாம் அரசாங்கத்திடம் இருந்து வேண்டிய உத்தரவுகள் பெற்று கத்தோலிக்க முகாமையினால் கட்டப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

## 64,000 ஞானஸ்நானங்கள்

சைகோனில் உள்ள கிஃநோன் மேற்றிராசனத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 64,000 ஞானஸ்நானங்கள் நிறைவேறியிருக்கின்றன. 70,000 பேர் ஆயத்தக்காரராக வேதக்கல்வி பெற்றுவருகிறார்கள்.

* * *

## மறியற்சாலையில் மேற்றிராணியார் உறுதிப்பூசுதல் அளித்தார்

இல்லிநொய்ஸ் மாகாணச்சிறையிலுள்ள சிற்றாலயத்தில் உறுதிப்பூசுதல் பெற்ற 85பேர்களில் 40பேர் மனந்திரும்பிய புதுக்கத்தோலிக்கர். யொலியே மேற்றிராசன அதிபர் மக்நமாரா ஆண்டகை இவர்களுக்கு உறுதிப்பூசுதல் அளித்தபொழுது சகைதிகள் ஞானத்தந்தையராய் கடமையாற்றினர். இச்சிறையி உறுதிப்பூசுதல் அருளியது இது ப தாவது தடவையாகும்.

## அப்போஸ்தலிக்க கார்மேல்சபை அபேட்சகர்களுக்கு அறிவித்தல்

சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்த பின்பு அப்போஸ்தலிக்க கார்மேல் சபையிற் சேரவிரும்பும் இளம் பெண்மணிகளுக்கென, கண்டியில் ஓர்இடம் புதிதாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சேர விரும்புவோர் பின்வரும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும் :

சங். பெரிய தாயார் அவர்கள்,
கார்மேல் மடம்,
88, கம்பெல் பிளேஸ்,
கொழும்பு, 10.

# தேம்பாவணி - நாட்டுப்படலம் விளக்கவுரை

(ஆசிரியர்பக்கத் தொடர்ச்சி)

னின்றும் கொண்டுவந்தவற்றை ஏற்போருக்குக் கொடுத்து மிகுந்திருந்தாலும், அவற்றைத் திருப்பிக் கொண்டுபோகாமல ஏற்போருக்கே வரைவின்றிக் கொடுத்துவிடுவதுபோல, மேகங்களும் கடலில்நின்றும் மொண்டுவந்த நீரையெல்லாம் திரும்பக் கொண்டுபோகாமல் மலைகளிலும் பிறவிடங்களிலும் வரைவின்றிப் பொழிவனவாயின. இது பண்பும் தொழிலும்பற்றிவந்த உவமையணி.

"உள்ளி உள்ளவெ லாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின்வ ழங்கின மேகமே"—கம்பரா. பால. ஆற்று 4.

எனக் கம்பர், தம்மிடமுள்ள நீரையெல்லாம் பொழியும் மேகத்திற்கு வரையாது கொடுக்கும் வள்ளல்களை உவமைகூறினார். அவ்வாறே வீரமாமுனிவரும் வரையாது பொழியும் மேகத்திற்கு வள்ளல்களை உவமைகூறுகின்றார். இவ்வாறே,

"பொன்னங் குன்றின்மேல் அவன்கொடை போன்மெனப் பொழிந்த"
என நளமகாராசனது கொடையை மழைக்கு உவமைகூறினார் அதிவீரராம பாண்டியன் என்க.

செரு = போர்க்களம்
"செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்"
— கம்பரா. பால. கையடை 10.

படர்தல் = பரத்தல்
"நீர்மேற் படரா நெடுங்குன்று" — கம்பரா. சுந்தர. கடறாவு 52.

உஞற்றிய = செய்த
"உரவிடமதனை நண்ணி உறுதவம் உஞற்றுங்காலை"
— கம்பரா. பால. மிதிலை 119.

வள்ளல் = வரையாது கொடுப்போர்
"உள்ளது மறுதவு வள்ளலையுமொத்த" — கம்பரா. பால. வரை 23.

வயின்தொறும் = இடங்கள்தோறும்
"வாம்பில் பல்மீன் வயின்வயின் விளங்கி"—பெருங். உஞ்சை 33 ; 49
"தூயான் வயின் அவ்வர சீந்தவன்" — கம்பரா. சுந்தர. உருந் 93.

வியன் = அகன்ற
"விபுல மென்னும் வியன் பெருங்குன்றத்து" — பெருங், இலா 11 ; 55.

வரைவில = அளவில்லாமல்
"வரைவில் வண்மை வத்தவ மன்னற்கு"—பெருங், இலா 7 ; 169.

பொழிதல் = அளவுமிகுந்து வெளியிடல்.
பொழிந்த காதல் தொடரப் பொருளெலாம்"
—கம்பரா, பால, உலாவி 54.

மிடை = நிறைவு
"மிடையும் வெள்வளை புள்ளொடு மொலிப்ப"
—கம்பரா, பால, அகலி 99.

என இலக்கியங்களுட் பயின்றுவருவது காண்க.

இவை மூன்றுபாட்டினாலும், "வெண்கொடிபோல் விளங்கிய வெண்மேகங்கள் நீரையுண்டு கரியமதயானைகளைப்போலக் கறுத்து, போர்க்களத்தில பயன்பட்ட வேல்போல மின்னி, போர்முரசுபோல் முழங்கி, வள்ளல்களின் கொடைபோல மலைகளிலும் பிறவிடங்களிலும் பெருமழை பொழிந்தன" என்பது கூறப்பட்டது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday August 12-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org